
# தீபகச் சுடர்

நவம்பர் 2024

தீபம் 13 சுடர் 06

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து **இறையாசீர்**



***அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,***

**புனிதர்களாக, எதிர்நோக்கு திருப்பயணிகளாக, இறையரசைக் கட்டியெழுப்புவோம்.**

எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய நம்மை திருஅவை இந்த நவம்பர் மாதத்தில் நிறைவாழ்வு, இறப்பு, மற்றும் இறையரசைப் பற்றி சிந்திக்க அழைக்கிறது. எல்லா புனிதர்களின் பெருவிழா, இறந்த ஆன்மாக்களின் நினைவு விழா, கிறிஸ்து அரசர் பெருவிழா ஆகிய இம்மூன்று விழாக்களும் ஒன்றோடொன்று தொடர்புக்கொண்டு நமது எதிர்நோக்கின் திருப்பயணத்தின் முடிவில் இறையரசில் பங்குபெற வழி செய்கிறது. எனவே, புனிதம், நினைவு, இறையரசு ஆகியவற்றை தியானித்து இவை யாவும் நம் வாழ்வில் தினமும் நமது வாழ்வாலும், நம்பிக்கையாலும், நடைபெறும் நிகழ்வுகள் என கொண்டாடுவோம்.

**அனைத்து புனிதர்களின் பெருவிழா:** நவம்பர் 01ம் தேதி திருஅவை நம் எல்லா புனிதர்களையும் அவர்களின் எடுத்துக்காட்டான புனிதமான கிறிஸ்த வாழ்வில் அவர்கள் சந்தித்த சவால்கள், துன்பங்கள், நெருக்கடிகள், மற்றும் அவற்றினிடையே கடவுள் துணையால் புனிதமான வாழ்க்கை வாழ, கிறிஸ்தவர்கள் இக்காலத்திலும் வாழ முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. 'நான் கிறிஸ்துவைப் போல் நடப்பதுபோன்று நீங்களும் என்னைப்போல் நடங்கள்" என்ற பவுலடியாரின் வார்த்தைக்கேற்ப புனித பிரான்சிஸ் அசிசியார், புனித தொன்போஸ்கோ, புனித அன்னை தெரேசா போன்று நாமும் ஒருவரையொருவர் அன்பு செய்து, உதவி செய்தும் புனிதர்களாக வாழ நம்மை அழைக்கின்றது.

**இறந்த ஆன்மாக்களின் நினைவு:** நவம்பர் 02ம் தேதி நம்மோடு வாழ்ந்து நமக்குமுன் சென்ற நம்பிக்கையாளர்கள் அனைவரையும் நினைவுக் கூர்ந்து அவர்கள் இறைவனின் இரக்கத்தினால் அவர்களுக்குரிய உரிமைப்பேரான இறையாட்சியில் பங்குபெற நாம் செபிக்க வேண்டுமென திருஅவை நம்மை அழைக்கிறது. நமது குடும்பத்தில் மரித்த பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள், சகோதர சகோதரிகள் அவர்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்து, அவர்களின் கல்லறைகளை சந்தித்து, அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற கிறிஸ்துவ மதிப்பீடுகளை வாழ்ந்து இறையரசில் ஒருநாள் நாமும் அவர்களைச் சந்திப்போம் என நம்பிக்கையுடன் வாழ்வோம்.

**கிறிஸ்து அரசர் பெருவிழா:** நவம்பர் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் கிறிஸ்து நமக்கெல்லாம் அரசர் என்ற பெருவிழாவைத் திருஅவை கொண்டாடுகிறது. இந்த விழா கிறிஸ்து இவ்வுலகை, சாவை வென்றார், இறுதியில் அவரது ஆட்சி நிலைபெறும் அந்த ஆட்சிக்கு முடிவு இராது என்றும் நாம் அனைவரும் இறையாட்சிக்கு உட்பட்டவர்கள் என்றும் **அன்பு, உண்மை, நீதி, சமத்துவம்** என்ற இறையாட்சி விழுமியங்களில் வாழ நம்மை அழைக்கிறது. 'எனது அரசு இவ்வுலகைச் சார்ந்தது அன்று" (யோவான் 18:36)ல் கூறுவது போன்று நாமும் இந்த ஆட்சிக்கு அழைக்கப்பட்டவர்கள் என்பதை நினைவுக் கூர்ந்து சமாதானத் தூதுவர்களாக வாழ்வோம்.

அனைத்து புனிதர்களின் விழா, **நாம் புனிதர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும்,** இறந்த ஆன்மாக்கள் விழா, **நாம் நன்றியுடனும், நம்பிக்கையுடனும் வாழ வேண்டுமென்றும், நாம் எதிர்நோக்கின் பயணிகள் என்பதையும்,** கிறிஸ்து அரசர் பெருவிழா **நாம் இவ்வுலகை சார்ந்தவர்கள் அல்ல, மாறாக நாம் இவ்வுலக துன்பங்களையெல்லாம் ஒருநாள் வென்றிடுவோடும் என்பதையும்** ஆணித்தரமாக நமது இல்லங்களிலும், பங்குகளிலும், பணித்தளங்களிலும் எடுத்துரைக்க நம்மை அழைக்கிறது.

இறுதியாக நாம் அனைவரும் எதிர்நோக்கின் திருப்பயணிகள். எனவே எல்லாப் புனிதர்களோடும், இறந்த நம்பிக்கையாளர்களோடும், நாமும் ஒருநாள் கிறிஸ்துவின் இறையாட்சியில் பங்குபெற, இறையாட்சியைக் கட்டியெழுப்ப உறுதிக்கொள்வோம். 'வாருங்கள் என் தந்தையின் ஆசிப் பெற்றவர்களே, உலகம் தோன்றியது முதலாக, உங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட உரிமைப் பேரான ஆட்சியை பெற்றுக் கொள்ளுங்கள்" (மத். 25:34) என்ற இயேசுவின் அழைப்பிற்கேற்ப இந்த நவம்பர் மாதத்தை புனிதர்களோடும், எதிர்நோக்கோடும் கொண்டாடுவோம்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** *ச.ச*
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.11.2024 புனிதர் அனைவரின் பெருவிழா - திருப்பலி 01

02.11.2024 இறந்த நம்பிக்கையாளர் அனைவர் நினைவு - திருப்பலி 02

03.11.2024 பொதுக்காலம் 31ம் ஞாயிறு - திருப்பலி 03

09.11.2024 இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்புவிழா-திருப்பலி 06

10.11.2024 பொதுக்காலம் 32ம் ஞாயிறு - திருப்பலி 07

13.11.2024 அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி - திருப்பலி 08

14.11.2024 குழந்தைகள் தினவிழா - செபவழிபாடு 09

15.11.2024 அருளாளர் மதலேனா மொரானோ - திருப்பலி 11

17.11.2024 பொதுக்காலம் 33ம் ஞாயிறு - திருப்பலி 12

18.11.2024 புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு - திருப்பலி 14

21.11.2024 கன்னிமரியா காணிக்கையாக அர்ப்பணித்தல் திருப்பலி 15

22.11.2024 புனித செசிலியா நினைவு - திருப்பலி 16

24.11.2024 அனைத்துக்கும் அரசராம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பெருவிழா - திருப்பலி 17

30.11.2024 புனித அந்திரேயா திருத்தூதர் விழா - திருப்பலி 18


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


முடிவில்லா வாழ்வு பெறுபவர் யார்? 20

அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி வாழ்வை அறிவோம் 22

மூவொரு உலகின் அரசர் இயேசு கிறிஸ்து 24

திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.11.2024 புனிதர் அனைவரின் நினைவுநாள் திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. திவெ. 7: 2-4, 9-14 II. 1யோவா. 3: 1-3 மத். 5: 1-12

அனைத்து புனிதர்களின் திருவிழா திருப்பலிக்கு வருகைத் தந்திருக்கும் திருஅவையின் நம்பிக்கையாளர்களை அன்புடன் வரவேற்கிறோம். திருஅவையின் ஆணிவேரான புனிதர்கள், வேதசாட்சிகள் ஆகியோரின் இறந்த நாட்களை அவர்கள் விண்ணகப் பிறப்படையும் நாட்களாகக் கருதி பிறப்பு விழாவாக இன்று நாம் கொண்டாடுகிறோம். யார் இந்தப் புனிதர்கள்? புனிதர்கள் கூட்டத்தில் இறைமகன் இயேசுவின் தாய் புனித கன்னிமரியா தொடங்கி திருத்தூதர்கள் முடிய மற்றும் இளையோர், முதியோர் என்ற வேறுபாடுகளின்றி பல்வேறு நிலையில் அதாவது அரசர்கள் முதல் ஏழைகள் வரை திருமணமாகாதவர், துறவிகள், திருமணமானவர்கள் என்று பல்வேறு நிலைகளில் இறையாட்சிப் பணி புரிந்தவர்கள். இவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது இறைவனுக்கு விருப்பமான புனித வாழ்வு வாழ்ந்தவர்கள். இறைமகன் இயேசுவிற்காக தமது இன்னுயிரை தியாகம் செய்தவர்கள். வாழ்வின் புனிதத்தைப் பேண வேண்டும் என்பதற்காக உயிரைத் துச்சமென மதித்து வாழ்ந்தவர்கள். புனிதர்கள் முன்பு பல்வேறு நாட்களில் கொண்டாடப்பட்ட இத்திருவிழா திருத்தந்தை மூன்றாம் கிரகோரி அவர்களின் காலத்தில் (731-741) நவம்பர் முதல் தேதியானது கொண்டாடப்பட்டது. முதலில் வேதசாட்சிகளுக்கு மட்டும் திருவிழா கொண்டாடப்பட்டது, பின்பு விண்ணுலகில் இருக்கும் புனிதர்கள் அனைவரையும் இன்றைய நாளில் நினைவுக்கூறப்பட்டு கொண்டாடப்படுகிறது.

கடவுளை யாருமே என்றுமே கண்டதில்லை (யோவா. 1:18) ஆனால் நம்மிடையே மனிதர்களாகப் பிறந்து புனிதர்களாக மாறியவர்கள் வழியாகத்தான் இறைவன் தமது மாட்சியை வெளிப்படுத்துகின்றார். புனிதர்கள் நம்மோடு இன்றும் வாழ்கிறார்கள், நமக்காகச் செபிக்கிறார்கள், நமக்காகப் பரிந்துப்பேசி அருள் வரங்களை பெற்றுத் தருகிறார்கள். விண்ணகத்தில் புனிதர்கள் தங்களிடம் இறைமக்களின் செபங்கள் வரும்போது கிறிஸ்து இயேசுவின் அரியணைமுன் இந்த செபக்காணிக்கையை திடமாக அர்ப்பணிக்கிறார்கள். நாம் தூய வாழ்வு வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். புனிதர்களின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு கனிவுடையோராக, நீதியை நிலைநாட்டுவோராக, இரக்கமுடையோராக, தூய்மையான உள்ளத்தோராக, அமைதியை ஏற்படுத்துவோராக, இந்த மனித வாழ்வின் உண்மையான இலக்கையடைய இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் ஊற்றே எம் இறைவா, புனிதர்களைப்போன்று வாழ அழைக்கப்பட்ட உம் திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் வீண் பெருமைக்கும், கட்சி மனப்பான்மைக்கும் சாதிய பற்றுக்கும் இடம் கொடுக்காமல் அனைவரும் இணைந்து ஒருமனதோராய் திருஅவையின் வளர்ச்சிக்கு பாடுபடுபவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்புத் தந்தையே இறைவா, "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், என்ற இறைவார்த்தையின்படி நாட்டுத் தலைவர்கள் அரசியல் வாதிகள், அனைவரும் தங்களின் நலத்திட்டங்களை நேர்மையுடனும், தாராள உள்ளத்துடனும் மக்களுக்கு பணிபுரியும் நல்லுள்ளத்தை அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. புனிதர்களுக்கெல்லாம் புனிதரே எம் இறைவா, புனிதர் அனைவரின் பெருவிழாவினை கொண்டாடி மகிழும் இந்நாளில் நாம் அனைவரும் பல்வேறு துன்பங்கள், துயரங்களை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டு நம்பிக்கையோடு முன்மாதிரியாக இருந்த புனிதர்களைப் பின்பற்றி நாங்களும் புனித வாழ்வு வாழ வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. தூய உள்ளத்தோருக்கு உம்மை வெளிப்படுத்துபவரே, இன்றைய உலகில் பொறுப்பில் உள்ளவர்கள் பொதுவாழ்க்கையிலும், அலுவலகங்களிலும், கையூட்டு எதுவும் பெறாமல் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 02.11.2024 இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவுநாள் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

I. சாஞா. 3: 1-9 II. உரோ. 5: 5-11 யோவா. 6: 37-40

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று இறந்த நம்பிக்கையாளர்களின் விழாவினைக் கொண்டாடுகின்றோம். அவர்களுக்காக செபிப்பது இறைவனுக்கு உகந்த செயல். இறந்த பிறகு மனிதனுக்கு என்ன நடக்கிறது என்பதை பற்றிச் சிந்திப்போம். கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. இறந்த பிறகு உடனே துவங்கும் வாழ்வு நிலை வாழ்வாகும், இதற்கு முடிவே இராது. ஒருவர் இறந்தவுடன் இறந்த இடத்திலேயே அப்பொழுதே கிறிஸ்துவால் தனித்தீர்வை வழங்கப்படுகிறது. அவரவர் செயலுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப உடனே வழங்கப்படுகிறது. இந்த தனித்தீர்வை பொதுத்தீர்வையில் உறுதி செய்யப்படும். தூய அருள் நிலையில் இறப்போர் தூய்மையாக்குதலின்றி நேரடியாக விண்ணகத்தில் நுழைவர். சாவான பாவநிலையில் இறைவனை விரும்பாமல் பாவத்திற்கு மனம் வருந்தாமல் இறப்போர் முடிவில்லா

நரகத்துக்குள் செல்வர். கடவுளோடு நட்புறவில் இருந்து நிலைவாழ்விற்கு உறுதி செய்யப்பட்டிருந்தாலும் பாவங்கள் மன்னிக்கப்படாத நிலையில் ஆயத்தமின்றி இறந்தால் உத்தரிப்பு நிலைக்கு சென்று பாவத்திற்கு பரிகாரம் செய்து தூய்மையான பிறகு விண்ணகம் நுழைவர். உத்தரிப்பு நிலையில் இருப்பவர்களால் செபிக்கவோ, இரக்கச் செயல்களில் ஈடுபடவோ மனதை மாற்றிக் கொள்ளவோ இயலாது. ஆகவே இறந்தோருக்கான நமது இரக்கச் செயல்கள் அவசியமாகிறது.

செபங்கள், செபமாலை செபிப்பது, சிலுவைப் பாதை செய்வது, திருப்பலி ஒப்புக்கொடுப்பது, தான தர்மங்கள், தவ முயற்சிகள் போன்றவை இறந்தவர்களின் பாவங்கள் குறைந்து, அவர்கள் விண்ணகம் நுழைய வழி செய்கிறது. நாம் விண்ணகம் செல்வதற்கு முன்பே, நம்மால் ஒருவரோ இருவரோ நமக்கு முன்பே விண்ணகம் செல்ல காரணமாய் இருப்போம். துன்புறுவோர் விண்ணகம் அடையும்போது ஏற்படும் மகிழ்ச்சி நம் குடும்பத்தைவிட்டு நீங்காது என்பதை உணர்வோம். இன்று மட்டுமல்ல அன்றாடம் செபிப்போம், இறை இரக்கத்தை அவர்களுக்குப் பெற்றுத் தருவோம் என்ற மனஉறுதியோடு இறைநம்பிக்கையில் வாழ வரம் வேண்டி இப்பலியை பரிகார பலியாக உருக்கமுடன் ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நிலைவாழ்வை பெற்றுத் தரும் இறைவா, திருஅவைக்கு உம்மால் அழைக்கப்பட்டு, பணி செய்து மரித்த மற்றும் நாங்கள் அனைவரும் நம்பிக்கை ஒளிபெற வழிகாட்டிய அனைத்து ஆன்மாக்களும் உமது இரக்கத்தினால் நிலைவாழ்வடைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. முடிவில்லா அமைதியைத் தரும் இறைவா, உமது திருப்பெயரில் நம்பிக்கை வைத்து மரித்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும் உத்தரிப்பு நிலையில் நீண்ட நாட்களாக துன்புறும் ஆன்மாக்களும் உமது பேரிரக்கத்தால் முடிவில்லா சமாதானத்தில் இளைப்பாறுதல் பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வுதரும் இறைவா, உலகமெங்கும் போர்களினாலும் குழப்பங்களினாலும் தகுந்த ஆயத்தமின்றி மரித்தவர்களும், ஆபத்து விபத்துக்களில் சிக்கி மரித்தவர்களும் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நிலைவாழ்வைப் பெற அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. மீட்பருளும் இறைவா, இறந்தோரின் நிலையைப் புரிந்துக்கொள்ளும் நாங்கள், தீமையை எதிர்த்து போர் புரியவும், நிலைவாழ்வுக்கு தகுதியாகும் அன்புறவில் நிலைத்து நிற்கவும், நம்பிக்கை ஒளியை எங்கும் ஏற்றிடவும், துன்புறுவோருடன் தோழமையில் பங்கு கொள்ளவும் தொடர்ந்து செபிக்கவும் வரம்தர உம்மை மன்றாடுகிறோம்.

## 03.11.2024 பொதுக்காலம் 31ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. இச. 6: 2-6 II. எபி. 7: 23-28 மாற்கு 12: 28-34

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, ஆண்டவர் இயேசுவின் பெயரால் இனிதே இப்பலிக்கு வரவேற்கின்றோம். உன் கடவுளாகிய ஆண்டவர் நானே என அறிந்துக்கொள்ளவும், அன்பு செய்யவும், பிறரன்பில் நிலைத்து நின்று இறையாட்சியைப் பெற்றுக் கொள்ளவும் அழைக்கின்றார். இன்றைய முதல்வாசகத்தில் கடவுளுக்கு அஞ்சி, கடவுளின் நியமங்களையும், கட்டளைகளையும் நிபந்தனையின்றி வாழ்நாள் எல்லாம் கடைப்பிடிக்க வேண்டுமென்று அழைக்கின்றார். உன் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர் என்று ஒரே கடவுள் நம்பிக்கைக்கும் அவரே முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும், முழுமனத்தோடும், முழு ஆற்றலோடும் கடவுளிடம் அன்பு கூர்வாயாக என்று அன்பில் நிலைத்திருக்கவும், இன்று நான் கூறியவார்த்தைகள் உன் ஆவியில் எழுதப்பட்டதாக இருக்கட்டும் என்றும் கூறுகிறார்.

இரண்டாம் வாசகத்தில், இயேசு கிறிஸ்து வழியாக கடவுளிடம் வருபவரை மீட்க வல்லவரும், கடவுளிடம் பரிந்து பேசுவதற்கென்றே இயேசு இன்றும் உயிரோடு இருக்கின்றார் என்பதை விசுவசிக்க இவ்வாசகம் நம்மை அழைக்கின்றது. அன்பிற்குரியவர்களே, நற்செய்தியில் இயேசு இறையன்பையும், பிறரன்பையும் இதயத்தில் ஏற்று கடவுள் ஒருவரே என நம்பி வாழ்வது எரிபலிகளைவிட சிறந்த வாழ்வென்றும் இறையாட்சிக்கு நெருக்கமான வாழ்வு என்றும் குறிப்பிடுகிறார். மறைநூல் அனைத்திற்கும் அடித்தளமும் அச்சாணியுமாக உள்ள இந்த 2 கட்டளைகளையும், அறிவு மட்டத்தோடும், உணர்வு மட்டத்தோடும் நிறுத்திவிடாமல், வாழ்வின் அடித்தள செயல்பாட்டிற்கு கொண்டு செல்லும்போது நாம் இறையாட்சிக்கு மிக நெருக்கமாக இருக்கிறோம். செயல்பாடுகள் இல்லாத அன்பு பிறவாத குழந்தைக்கு சமம் என்பதை உணர்வோம். கடவுளை அன்பு செய்வதென்பது அவரது கட்டளைகளை கடைப்பிடிப்பதாகும். (யோவான் 15: 10-17). நிபந்தனையற்ற கீழ்ப்படிதலோடு இறையன்பில் நிலைத்திருக்க இப்பலியில் வரம்கேட்டு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. குருத்துவத்தின் நாயகனே எம் இறைவா, உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒப்புவித்து இறைப்பணி செய்திடும் எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உலகின் பிடியில் சிக்கிடாமல் உமக்குகந்த முறையில் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பின் நாயகனே இறைவா, இந்நாட்டையாளும் தலைவர்கள், அரசியல்வாதிகள், அரசாங்க பணியாளர்களை உம் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். தங்களின் பணியில் நேர்மையும், அன்பும், கனிவும் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. உலகம் முடியும்வரை உம்மோடு இருப்பேன் என்றுரைத்த அன்பு தந்தையே, நற்செய்தி பணியினை சிறப்பாக செயல்படுத்த தேவையான அனைத்து ஆற்றல்களையும் அளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. எங்கள் பாவங்களுக்காக இறந்து உயிர்த்தெழுந்த எம் அன்பு இறைவா, எம் பங்கில் பணிச் செய்து மரித்த குருக்கள், கன்னியர், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரின் ஆன்மாக்களும், யாரும் நினையாத ஆன்மாக்களும் உம் கருணையினால் விண்ணக வாழ்வில் மகிழ்ந்து உம்மை போற்றித் துதிக்க வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

## 09.11.2024 புனித இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி சம்பந்தன்

I. எசே. 47: 1-2, 8-9, 12 II. 1கொரி. 3: 9-11, 16-17 யோவா. 2: 13-22

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நாம் இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழாவினை சிறப்பிக்க ஒன்று கூடியுள்ளோம். புனித இலாத்தரன் பெருங்கோவில் நமது மீட்பரான இயேசு கிறிஸ்துவிற்கும், புனித திருமுழுக்கு யோவான், புனித யோவான் (நற்செய்தியாளர்)கும் நேர்ந்தளிக்கப்பட்ட முதன்மை பேராலயம், வத்திக்கான் நகரில் இலத்தீன் வழிபாட்டு முறையுடன் கி.பி. 324ல் நேர்ந்தளிக்கப்பட்ட கோவில், உரோமை மறைமாவட்டத்தின் ஆயராகவும், அனைத்துலக திருஅவைக்கு தலைவராகவுள்ள திருத்தந்தையின் ஆட்சிப்பீடம் அமைந்த கோவில். கி.பி. நான்காம் நூற்றாண்டில் அடித்தளமிடப்பட்டு 1823ல் நிறைவுற்றது. 14ம் நூற்றாண்டுவரை திருத்தந்தையின் ஆட்சிப்பீடம் இக்கோவில்தான் விளங்கியது. இலாத்தரில் தான் ஐந்து பொதுச்சங்கங்கள் நிகழ்ந்தன. ஆனாலும் 14ம் நூற்றாண்டில் திருத்தந்தை உரோமையில் லாத்தரன் தலைமையிடத்தை விட்டுவிட்டு, பிரான்ஸ் நாட்டில் "அவஞ்ஞோன்" என்னும் நகருக்கு மாற்றினார். பின் 1378ல் திருத்தந்தை 9ம் கிரகோரி பொறுப்பேற்றதும் மறுபடியும் உரோமையில் தலைமைப்பீடம் நிறுவப்பட்டு கோவில் சீரழிந்த நிலையில் இருந்ததால் திருத்தந்தை வத்திக்கான் நகருக்கு மாறினார். 16ம் நூற்றாண்டில்தான் திருத்தந்தை மூன்றாம் பவுலும், திருத்தந்தை 5ம் சிக்ஸ்துஸ் காலத்தில் புதியதொரு கட்டடம் உருவாகியது. இன்றும் அதுவே உரோமை மறைமாவட்டத்தின் அலுவலக மையமாக உள்ளது. இலாத்தரன் திருத்தலத்தின் புனிதத்தைப் போற்றுவோம். நாமும் ஆண்டவர் வாழும் ஆலயங்களாக வாழ இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினராகிய நாங்கள் அனைவரும் கடமைகளை உணர்ந்து மக்களை இறைவனோடு ஒன்று சேர்க்க வேண்டிய அருளைப் பொழிந்து நாங்கள் நல்வழியில் நடக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஒளிரும் தீச்சுடரே எம் இறைவா, லாத்தரன் ஆலயத்தை நேர்ந்தளிக்கும் விழாவைக் கொண்டாடும் நாங்கள் எங்களின் உள்ளங்களிலும், தூய ஆவியார் வாழும் ஆலயங்கள் என்பதை உணர்ந்து, உள்ளமாகிய ஆலயத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாக்கும் இறைவா, பலவிதமான பிரச்சனைகளாலும், கஷ்டங்களினாலும் அவதியுறும் உம் பிள்ளைகளை கண்ணோக்கும். எங்களின் எண்ணங்கள், ஏக்கங்களை கண்ணோக்கி எங்களுக்கு புதுவாழ்வு தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 10.11.2024 பொதுக்காலம் 32ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

I. 1அரச. 17: 10-16 II. எபி. 9: 24-28 மாற்கு 12: 38-44

"எளிய உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியதே" என்ற இறைவார்த்தைக்கேற்ப நம் ஒவ்வொருவரையும் இறைவன் இத்திருப்பலி வழியாக நமக்கு அழைப்பு விடுக்கிறார். இன்றைய இறைவார்த்தை நமக்கு சொல்வது என்னவென்றால், "சில உண்மைகளை அனுபவித்தின்மூலம் மட்டுமே கற்றுக்கொள்ள முடியும். அவற்றுள் ஒன்றுதான், கொடுப்பதன் மேன்மை" கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற ஆண்டவரின் அருள்வாக்கின் அருமையை அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும். இன்றைய முதல் வாசகத்திலும், நற்செய்தி வாசகத்திலும் கொடுத்தலின் மேன்மை போற்றப்படுகிறது. முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எலியாவுக்கு அப்பம் கொடுத்து பசி நீக்கிய கைம்பெண்ணக்கு ஆண்டவர் அற்புதமாக தொடர்ந்து உணவு கிடைக்கும்படி செய்கிறார். நற்செய்தி வாசகத்திலும் ஏழைக் கைம்பெண் போட்ட காணிக்கையையும் பெரிதும் பாராட்டுகிறார். இவ்விரு நிகழ்விலும் அடுத்தவரிடமிருந்து தனக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் இருந்தாலும் தன்னிடமுள்ளதைப் பிறருக்குக் கொடுக்கும் மனநிலையில் உள்ளார். இறைவனின் ஆசீர் அளவுக் கதிகமாக அப்பெண்ணுக்குக் கிடைத்துள்ளது. இதிலிருந்து குறைவாக உள்ளவருக்குத்தான் நிறைவான மனம் இருக்கிறது என்பதை நாம் அறிகிறோம். எனவே நாமும் நம்மிடமுள்ளதைப் பிறருக்குக் கொடுக்கும் மனநிலையை நாம் ஏற்படுத்திக்கொள்வோம். இறைவன் நமக்கு ஏராளமான

கொடைகளை அள்ளித்தருகின்றார், அதிலிருந்து பிறருக்குக் கொடுக்கும் பேற்றினையும், ஞானத்தையும் நம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தால் இறைவனின் திட்டத்தில் உயர்ந்தவர்களாக வாழ்வோம் என்ற உறுதியான நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வுக்கு வழிகாட்டும் எம் இறைவா, திருஅவையின் சட்டத் திட்டங்களுக்கு உயிர்க்கொடுத்து வாழ்வாழ்க்கிக் கொண்டிருக்கும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து, நல்ல உடல்உள்ள ஆன்ம நலனளித்து, தங்களின் பணியை நேர்மையுடனும், பொறுப்புடனும் செய்ய தேவையாள அருளைப்பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நீதியின் தேவதே எம் இறைவா, பெருகிவரும் மக்கள் தொகையால் சுற்றுச்சூழல் மாசடைந்து நோய்களின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இயற்கையின் சீற்றத்தால், மழை, பெருவெள்ளம், பேரிடர் இவற்றிலிருந்து பாதுகாத்து மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் கிடைக்கப்பெற்று நலமோடும், வளமோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உயிரின் ஊற்றே எம் இறைவா, குடும்பங்களில் நிலவிவரும் அமைதியின்மை, வறுமை, பகைமை போன்ற காரணங்களால் சண்டைச் சச்சரவுகள் நீங்கி, ஒற்றுமையுடன் வாழவும், பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரவும், பெரியவர்களின் வார்த்தைகளை மதிக்கவும் வேண்டிய தாழ்ச்சியான மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. பிறர் வாழ தன்னையே கொடுத்த இறைவா, ஏழைமக்களின் உழைப்பைப் பெற்றுக்கொண்டு கூலி கொடுக்க தயங்கும் மக்களை கண்ணோக்கும். வாழ்க்கையில் முன்னேற முடியாமல், அன்றாட தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தவிப்பர்களுக்கு, அவர்களின் ஊதியத்தைக் கொடுத்து, அவர்களில் நிறைவுக்காணும் நல்லுள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.11.2024 புனித ஆர்த்தெமெதே சாத்தி திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

சகோதரர் ஆர்த்தெமெதே சாத்தி, தெற்கு இத்தாலியில் ரெஜியோ எமிலியா என்ற பகுதியில் பொரெத்தோ என்ற இடத்தில் 1880ம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் பிறந்தார். உழைப்பாளிகளான சாத்தியின் பெற்றோர் 1897ம் ஆண்டு அர்ஜென்டினாவிலுள்ள பாஹியா பிலான்சாவில் குடியேறினர். தன் வீட்டிற்கு அருகில் இருந்த சலேசிய இல்லத்திற்கு அடிக்கடி சென்று வந்த சாத்தி, 1900ம் ஆண்டு சலேசிய பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். இவர் 1902ம் ஆண்டில் எலும்புருக்கி நோயினால்

தாக்கப்பட்டபோது சிகிச்சைக்காக வியட்மா என்ற மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் நலம் பெற்றதும் தன் வாழ்வை நோயாளர்களின் நலனுக்காக அர்ப்பணித்தார். அருட்தந்தை இவாசியோவிற்குப் பிறகு இவரே மருத்துவமனையின் மருந்தகப் பொறுப்பாளரானார். மருத்துவ மனையின் உணவு தயாரித்தல், மருந்து கொடுத்தல், சுத்தம் செய்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் அன்புடனும், மகிழ்ச்சியுடனும் செய்தார். "நோயாளிகளுக்குச் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கினார். இவர் 1950ம் ஆண்டு தனது 70ம் வயதில் புற்று நோயினால் தாக்கப்பட்டு 1951ம் ஆண்டு மார்ச் 15ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். இவருடைய உடல் வியட்மாவிலுள்ள சலேசிய சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் இவருக்கு 2002 ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் அருளாளர் பட்டத்தை வழங்கினார். வழிநடத்த வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் மற்றும் துறவற வாழ்வில் தங்களை இணைத்துக்கொண்டுள்ள அனைவருக்கும் நல்ல உடல் நலமும், ஆன்மீக நலமும் தரவேண்டுமென்றும், தூய ஆவியாரின் வழிநடத்துதல் இவர்களுக்குள் என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, எங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். எங்களை தூய ஆவியாரின் ஆற்றலால் கத்தோலிக்க மறையுண்மைகளை நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் உம்மை பின்பற்றி வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, நன்மை செய்யவும், பகிர்ந்து வாழவும், மறவாதீர்கள் இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை என்று கூறியுள்ளதுபோல நாங்களும் இன்றைய புனிதரைப்போல நன்மை செய்வதிலும் கடவுளுக்கு பிரியமானதை செய்யும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 14.11.2024 குழந்தைகள் தினவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறை இயேசுவில் அன்புள்ள மாணவ செல்வங்களே, இன்று இந்தியா முழுவதும் குழந்தைகளின் தினத்தை சிறப்பிக்கின்றனர். இந்த நல்ல நாளில் இங்கு ஒன்று கூடியுள்ள நாம் சிறப்பிக்கும் இந்நேரத்தில் நம்மையெல்லாம் இந்நாள்வரை பாதுகாத்து வழிநடத்திவரும் இறைவனுக்கு நன்றி சொல்வதோடு நம் அனைவரையும் இறைவன் தன்னுடைய வல்லமையான கரங்களால் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், நம்

ஆண்டவர் இயேசு குழந்தைகளை மிகவும் நேசிக்கிறார். எவ்வாறெனில், அன்பு, கீழ்ப்படிதல், தாழ்ச்சி, மன்னிப்பு, சேவைமனப்பான்மை இவற்றை தம் போதனையின் கருப்பொருளாக கொண்ட அவர் குழந்தைகளின் மனநிலையைப் புகழ்ந்து பாராட்டி குழந்தைகளுக்கும் விண்ணரசிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை தன்னுடைய சீடர்களுக்கு விளக்குகிறார். அவ்வாறே நம்மைப் பெற்றெடுத்து, வளர்த்துவரும் தாய் தந்தையை நாம் மதிக்கவும், கீழ்ப்படியவும், அன்பு செய்யவும் வேண்டுமென்று, இன்றைய செபவழிபாட்டில் அனைவரும் சேர்ந்து செபிப்போம். நமது உள்ளத்தையும் உடலையும் ஒருமனப்படுத்தி இறைவனை நம்மிடையே அழைக்க இப்பாடலை பாடுவோம்.

**பாடல்:** என்னோட இயேசுவே கொஞ்ச நேரம் பேசுமே...

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கருணைக் கடலே இறைவா, எங்களைப் பெற்றெடுத்து அன்பு காட்டி எங்கள் தேவைகளை நிறைவேற்றி, எங்களுக்காகவே தியாக வாழ்வு வாழ்ந்துவரும் எங்கள் பெற்றோர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களின் வாழ்வில் நம்பிக்கையையும் புத்துணர்வையும் தந்தருளும். வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள், சோதனைகள், உடல்நலக்குறைவுகள் இவைகளிலிருந்து விடுதலை பெறவும்,
2. ஞானத்தின் ஊற்றே இறைவா, படிக்கும் பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் நன்றாக படிக்கவும், கல்வியிலும், ஒழுக்கத்திலும், இறைபக்தியிலும் சிறந்து விளங்கவும், எங்கள் பெற்றோருக்கு நாங்கள் ஆறுதலும், தேறுதலும், மனநிம்மதியும், மகிழ்ச்சியும் நாங்கள் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணைக் கடலே எம் இறைவா, எங்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நல்ல உடல்உள்ள நலம் தந்து அவர்களின் குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், எம் ஆசிரியப் பெருமக்களுக்கு நல்ல உடல்உள்ள நலனளித்து, எங்களை நல்வழியில் நடத்தக்கூடிய ஆற்றலையும் சக்தியையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கத்தின் இறைவா, பெற்றோரை இழந்து அனாதை இல்லங்களில் வாழ்கின்ற பிள்ளைகளை ஆசீர்வதியும். நீர்தாமே அவர்களுக்கு தாயும் தந்தையுமாக இருந்து வழிநடத்திட வேண்டுமென்றும், வறுமையின் காரணமாக தொழிற்சாலைகளில் உழைத்துக்கொண்டிருக்கும் சிறுவர், சிறுமியர், சாலையோர சிறார்கள், கைவிடப்பட்டோர் ஆகிய அனைவரையும் நீர் ஆசீர்வதித்து அவர்களுக்குப் புதியதோர் வாழ்க்கையைத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. ஆறுதலின் ஊற்றே இறைவா, மாற்றுத்திறன் கொண்ட அனைத்து பிள்ளைகளையும் நீர் ஆசீர்வதியும். மாற்றுத்திறன் கொண்டோரை இச்சமுதாயம் ஏற்றுக்கொண்டு, அவர்களிடமுள்ள திறமைகளை புரிந்துக் கொண்டு, வாழ்வில் முன்னேற உதவ வேண்டுமென்று செபிக்கின்றோம். அன்று உம் திருமகன் பலரை குணமாக்கியதுபோல இன்று இவர்களின் குறைகளை நீக்கி வாழ்வில் அனைவராலும் மதிக்கக் கூடிய மக்களாக நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

6. ஞானத்தின் ஒளிச்சுடரே எம் இறைவா, இவ்வாண்டு அரசாங்கத் தேர்வினை எழுதுபவர்கள் நன்றாக படித்து, நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிப்பெற்று, நல்லதொரு வேலைவாய்ப்பு கிடைக்கவும் உமது அருளையும், ஞானத்தையும் நிறைவாக பொழிந்தருளவும், உமது தூய ஆவியின் வல்லமையை அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**ஆசிரியர்:** அன்பு மாணவ மாணவிகளே, இறைவன் நம்முடைய வேண்டுதல்களை ஏற்று, நம்முடைய எல்லா தேவைகளையும், நிறைவேற்றுகின்றார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் இந்த செபவழிபாட்டை பாடலோடு நிறைவு செய்வோம்.

**பாடல்:** இயேசுவின் கரங்களில் நான் தவழ்கின்றேன்...

## 15.11.2024 அருளாளர் மதலேன் மொரானோ திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

"இறைவா நான் புனிதையாகும் முன் என்னைச் சாக விடாதேயும்..." இந்த ஒரு அழகிய வரத்தை மட்டுமே இறைவனிடம் கேட்ட அற்புதரின், விழாவை இன்று நாம் கொண்டாடுகிறோம். தனது 14 வயதிலேயே ஒரு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றிய இவர் இயற்கையிலேயே நல்ல ஆசிரியைக்கு உண்டான குணங்களைக் கொண்டவராக திகழ்ந்தார். 17 வயதில் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டயத்தைப் பெற்ற ஆசிரியையாக நியமிக்கப்பட்டார். பங்கில் மறைக்கல்வி எடுப்பதிலும் பல்வேறு பக்த சபைகளுக்கு தாராள உள்ளத்தோடு உதவுவதிலும் பெரும் பங்கு எடுத்தார் மதலேன். தன் தனிப்பட்ட வாழ்வில் ஒறுத்தலையும் மற்றவருக்கு உதவுவதையும் இறைவன் தந்த அழைப்பாக ஏற்று வாழ்ந்தார். மதலேன் தொன் போஸ்கோவை சந்தித்து பேசியபோது அவளிடமிருந்த அசாதாரண நற்குணங்களைக் கண்டுகொண்ட தொன் போஸ்கோ அவளது வயதுபற்றி எவ்வித கேள்வியும் எழுப்பாமல், சகாய அன்னையின் புதல்வியர் சபைக்கு ஆன்ம குருவாக இருந்த அருட்பணி. கலியேரோவிடம் மதலேனை அனுப்பினார். மதலேன் 1879ல் தன் முதல் துறவற வார்த்தைப்பாட்டை அளித்து சபையில் சகோதரியாக தன் வாழ்வினை தொடங்கினார். ஓராண்டிற்குள் 1880ல் தனது இறுதி வார்த்தைப்பாட்டையும் கொடுத்தார்.

அத்தருணத்தில் அவர் இறைவனிடம் கேட்ட ஒரு அழகிய வரம் இது. "இறைவா நான் புனிதையாகும் முன் என்னைச் சாக விடாதேயும்". மதலேன், 31 வயதில் துறவறத்தில் சேர முடிவு செய்த அவரது வாழ்வு இன்று, துறவறத்தில் இருப்போருக்கும் சரி, இல்லறத்தில் இருப்போருக்கும் சரி சமமான சவாலாக அமைகிறது என்பதே உண்மை. அன்பர்களே, இன்றைய நற்செய்தியில் சக்கேயுவின் மனமாற்றத்தை எண்ணி வியக்கும் நாம் இந்த மாற்றத்தை ஏற்படுத்த இயேசு தாமாகவே முன்வந்து சக்கேயுவை அழைத்து இந்த மனமாற்றத்தைத் தந்தது. எனவே நம்மை தாமாகவே வரவேற்கக் காத்திருக்கும் இறைவனை கண்டுகொண்டு அவரை எந்நாளும் நாடிவர அருள் வேண்டி தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தையும், நல்வழியையும் காட்டியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இயேசுவே, தவறான வாழ்க்கையில் மூழ்கியிருக்கும் நாங்கள் மனமாற்றம், மன்னிப்பு, மகிழ்ச்சி, மீட்பு என்றெல்லாம் விரிவடைந்து இறுதியில் உம்மிடம் நிலை வாழ்வு பெற்று வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தாமாகவே முன்வந்து சக்கேயுவை அழைத்து அவரோடு விருந்துண்டு, அவரது வாழ்வை மாற்றிய அன்பு இயேசுவே, உம்மைப் போல நாங்களும் தன்முனைப்போடு செயல்பட உமது தூய ஆவியாரை எங்களுக்கு நிறைவாய் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.11.2024 பொதுக்காலம் 33ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. தானி. 12: 1-3 II. எபி. 10: 11-14,18 மாற்கு 13: 24-32

அன்பிற்கினிய இறைமக்களே, பொதுக்காலத்தின் 33ம் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வந்திருக்கும் உங்கள் அனைவரையும் திருஅவை அன்புடன் அழைக்கிறது. உலகின் முடிவில் நடக்கவிருக்கும் இறுதி தீர்ப்பை முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. நல்லோர் மீடக்கபடுவர், தீயோர் இழிநிலைக்கு தள்ளப்படுவர். முடிவில்லாத வாழ்வு பெறுவதும் முடிவில்லா இழிநிலையைப் பெறுவதும் நாம் வாழும் வாழ்வைப் பொறுத்தது. வாழ்வின் நூலில் நம் பெயரும் எழுதப்பட நமது வாழ்வை சீர்ப்படுத்த முன்வருவோம். ஆண்டவரின் இறுதித் தீர்ப்பு நாளில் நாமும் நம் குடும்பமும் மீட்பைப் பெற்றுக்கொள்ள வரம் வேண்டி முதல் வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

இரண்டாம் வாசத்தில் இயேசுவின் சிலுவைப்பலியே சிறந்த உன்னதபலி. அவரின் தியாகப் பலிக்கு ஈடு இணை இவ்வுலகில் எதுவுமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய நற்செய்தியில் கிறிஸ்துவின் வருகைப்பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் அவர் வந்த பின்பு என்ன நடக்குமென்றும் எடுத்துக்கூறுகிறது. இயேசுவின் வருகை என்பது ஏழைகளை துன்புறுத்தி அவர்களை அடக்கி ஆள்பவர்களை அத்தகைய கொடியவர்களை அழிக்கவே அவரின் வருகை அமைந்துள்ளது. இன்று சிறு குடும்பத்தில் தொடங்கி உலகின் எல்லா இடங்களிலும் ஆணவம் தலை விரித்தாடுகிறது. முன்னேறிய நாடுகள் பிற நாடுகளின் வளர்ச்சியைத் தாங்கிக்கொள்ள இயலாமல் ஆணவப்போர் தொடுத்து அவர்களை அடக்க நினைக்கிறது. தங்களைப் பொருளாதார அளவில் பிறநாடுகள் முந்திவிடுமோ என்று எண்ணி பயந்து பிறநாட்டு மக்களைக் கொல்ல திட்டம் தீட்டுகிறது. இயேசுவின் வருகைக்குப்பின் என்ன நடக்கும்? என்று பார்க்கும்போது தெரிந்துக்கொண்ட மக்களை இறைவன் என்றுமே கைவிடமாட்டார். அல்லும் பகலும் ஆண்டவர் பெயரைச் சொல்லிக் கூப்பிடுபவர்களை நீதியோடு நடத்துவார். மீட்புதருவார். ஆண்டவரின் வருகையின்போது துன்புறும்உலகம் முடிவுறும். நாம் புதுப்படைப்பாக மாற்றப்படுவோம். நாம் தூய்மையான வாழ்வு வாழ்ந்து நமது பெயரும் வாழ்வின் நூலில் எழுதப்பட இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஞானமும் வல்லமையும் உடையவரான ஆண்டவரே, எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகியோருக்காக மன்றாடுகிறோம். அவர்கள் ஒவ்வொருவரும் விழிப்போடும், அறிவுத் தெளிவோடும் செயற்பட்டு, உமக்கேற்ற நற்கனி கொடுக்கும் நற்பணியாளர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகின் கடையெல்லைவரை அரசால்பவரே எமது நாட்டு தலைவர்களை உமது கையில் ஒப்படைக்கிறோம். நீர் அவர்களை ஆசீர்வதித்து அவர்கள் சுயநலம் கருதாது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படக் கூடிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நற்பேறும் நலமும் அளிக்கின்ற இறைவா, குடும்ப அமைதி, உடல்நலம், விடுதலை வாழ்வு குழந்தைப்பேறு ஆகியவற்றிற்காக ஏங்கித்தவிக்கும் அனைவர்மீதும் கருணைக்கூர்ந்து அவர்களின் ஏக்கத்தைப்போக்கி, அவர்களின் தேவைகளை நிறைவு செய்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நல்வாழ்வை அமைத்துத் தருகின்ற அற்புதரே, பல்வேறு இயற்கைச் சூழ்நிலைகளால் இருக்க இடமின்றியும், உண்ண உணவின்றியும்,

உடுத்த உடையின்றி தவிக்கும் மக்களை நீர் கருணைக்கண் நோக்கும். தாராள உள்ளம்படைத்தோரை நீர் அவர்களுக்கு உதவி அனைத்துமாய் இருந்து பாதுகாத்து அரவணைத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.11.2024 புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

இறையேசுவின்மீது பற்றுக்கொண்ட தெய்வப்பிள்ளைகளே, இன்று புனிதர்கள், பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழாவின் திருப்பலியில் பங்கேற்க உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம். 80ம் ஆண்டில் "அனக்ளேத்துஸ்" என்னும் திருத்தந்தை புனித பேதுருவின் கல்லறைமீது சலவைக்கற்களால் ஒரு சிற்றாலயத்தை அமைத்தார். பின்னர் அது ஒரு பெரிய ஆலயமாகக் கட்டப்பட்டது. 326ம் ஆண்டு இச்சிற்றாலயம் அபிஷேகம் செய்யப்பட்டது. திருத்தந்தை திருப்பலி நிறைவேற்ற ஒரு பீடம் இருந்தது. புனித பவுலின் பேராலயம் "கொன்ஸ்தாந்தின்" பேரரசரால் கட்டப்பட்டது. பவுலின் திருவுடலை அவர் கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து கொண்டு வந்து அடக்கம் செய்த கல்லறைமீது ஆலயம் கட்டப்பட்டு இருந்தது.

பின்பு இந்த இரண்டு ஆலயங்களும் பேரரசர் கான்ஸ்தாந்தின் காலத்தில் புதிதாகக் கட்டப்பட்டு, 12ம் நூற்றாண்டில் இதே நாளில் நேர்ந்தளிக்கப்பட்டன. "என்வீடு செபக்கூடமாக இருக்கும்" இயேசு ஆலயத்திற்குள் சென்று வியாபாரத்தில் மூழ்கி இருந்தவர்களை அங்கிருந்து விரட்டினார். இயேசு வர்த்தகத்தின் எதிரி அல்ல, ஆனால் நம் ஆண்டவர் இரண்டு காரணங்களுக்காக ஆத்திரமடைந்தார். முதலாவதாக புனித வணிகம் செய்வது, கடவுளின் வீட்டை இழிவுபடுத்துவது ஆகும். 2வதாக ஆலய வியாபாரிகள் நேர்மையற்றவர்களாக இருந்தனர். நாமும் இயேசுவைப்போல் உண்மையான கடவுளின் தூதர்களாக இவரின் பணியைத் தொடரவும், உண்மை, அன்பு, நீதியில் வளரவும் உழைப்போம், வாழ்ந்துக் காட்டுவோம். ஒவ்வொரு கத்தோலிக்கத் திருஅவையின் ஆலயத்திலும் நம்முடைய இறைவன் நற்கருணையில் உயிரோடு இருக்கிறார். நம்முடைய ஆடைகள், மனம், உரையாடல், செபங்கள் அனைத்தும் கடவுளின் இருப்பிடமான ஆலயத்திற்கு மிகப்பெரிய மரியாதைக்கு பங்களிக்கும் என்பதை நினைவில் கொண்டு இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்களை வழிநடத்துபவரே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், மற்றும் துறவறத்தார் செல்வத்திற்கு பணிவிடை செய்யாமல், உமக்குப்பணிவிடை செய்யும் உண்மையான ஊழியர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களை படைத்து பராமரிப்பவரே, எம் நாட்டையாளும் தலைவர்கள், பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே தலைவராக பணியாற்றாமல், ஏழை எளிய மக்களுக்கு அடிப்படைத் தேவைகளையும் வாழ்வாதாரத்தையும் பரந்த மனதோடு அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் தந்தையே எம் இறைவா, உமது நற்செய்தியின் வார்த்தையை எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்து, அதை பிறருக்கு எடுத்துரைக்கும் நல்ல ஞானத்தையும், ஆற்றலையும் அளித்து புத்தொளி எங்கள் வாழ்வில் வீச வமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.11.2024 புனித மரியாவை காணிக்கையாக அர்ப்பணித்தல் திருப்பலி

**முன்னுரை** திரு. T. சாம்சன்

இறையேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று அன்னை மரியாவை காணிக்கையாக அர்ப்பணித்தல் திருவிழாவை கொண்டாடுகின்றோம். சுவக்கினும் அன்னாளும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தபோது இறைவனிடம் வேண்டினர். அப்போது அவர்கள் தங்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தால் அக்குழந்தையை கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பதாக வேண்டியதால் அன்னை மரியாளை, காணிக்கையாக அர்ப்பணித்த நாளை நாம் சிறப்பிக்கின்றோம். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21ம் தேதி கொண்டாடப்படுகிறது. எருசலேமில் கி.பி. 543ல் நவம்பர் 21ம் நாள் சாந்தா மரியா நோவா ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது என்றால் இந்த திருவிழாதான் ஆதாரமாக உள்ளது.

மரியாள் கோவிலிலேயே தங்கி எபிரேய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். அன்று ஆண்டவரின் அடிமை என்று சொன்ன அவளுடைய வார்த்தைகள் அந்த நேரத்தில் வந்தது அல்ல, அதுதான் அவளது ஆன்மீகமாகவே இருந்தது. இதுவே மரியாளை இறைவனின் தாயாக மாற தயார் செய்யும் நிலையிலுமாக இருந்தது. இறைமக்களாகிய நாமும் நம்முடைய குடும்பத்தை இறைவனுக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். குறிப்பாக நம்முடைய குழந்தைகளை இறைப்பணி செய்வதற்காக காணிக்கையாக ஒப்புக் கொடுப்போம். அப்போதுதான் நம்முடைய குடும்பத்தை கடவுள் எல்லா தீமைகளிலிருந்தும் விடுவித்து அதிகமாக அன்பு கூறுவார். நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கும்போது இறைவனின் ஆசீர் நம் மனதிலும் இவ்வுலகிலும் தங்கும் இதுவே இறைவனுக்கு உகந்த காணிக்கை. இக்கருத்துக்களை நம் வாழ்வில் உள்வாங்கி இறைவனின் பிரசன்னத்தை முழுமையாக பெற்று இறைவனின் சாட்சிகளாக வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எம் நிலைவாழ்வுக்கு உணவாக உம் மகனையே கையளித்தவரே, எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உமக்கு காணிக்கையாக்குகின்றோம். தங்களது உறவுகளை மேம்படுத்தி வாழ்வுதரும் உணவான இறைமகனின் விழுமியங்களை வாழ்வில் கடைப்பிடித்து, சாட்சிய வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பால் எம்மை ஆளும் இறைவா, நாங்கள் ஒருவருக்கொருவர் உண்மையான பரிவன்பு காட்டவும், குறிப்பாக ஏழைகள், அனாதைகள், முதியோர்கள், கைவிடப்பட்டோர் அனைவருக்கும் எங்களால் இயன்ற உதவிகளையும், அன்பையும் அவர்களோடு பகிர்ந்து வாழும் தாராள மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்கள் வாழ்வை முன்னேற்ற பாதையில் நடத்திச் செல்பவரே, எம் நாட்டு தலைவர்களையும், அரசியல்வாதிகளையும் ஆசீர்வதியும். நாட்டில் வன்முறை, கொலை, கொள்ளை, இலஞ்சம் போன்ற அநீதிகள் நடந்துக்கொண்டிருக்கின்றன. அவற்றிலிருந்து மக்களை விடுவித்து பாதுகாக்க வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 22.11.2024 புனித செசிலியா கன்னி மறைச்சாட்சி திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்றைய புனிதரான புனிதை செசிலியாவின் திருநாள் நமது திருஅவையால் சிறப்பிக்கப்படுகிறது. இப்புனிதை அழியா உடல் வரம் பெற்றவர். கிறிஸ்தவரல்லாத பெற்றோருக்கு பிறந்தவர். அதுமுதல் இயேசுவிற்காக தன் கன்னிமையை ஒப்புக்கொடுத்தவர் இயேசுவை புகழ்ந்து பாடல்களை பாடிக்கொண்டே இருந்தவர். புதிய இசைக்கருவிகளை கொண்டு பலப்பாடல்களை இயற்றியவர். "ஆண்டவருக்கு புதியதொரு பாடல் பாடுங்கள் எக்காலம் முழங்கி பாடுங்கள்" என்ற திருப்பாடல்களின் வரிக்கேற்ப போற்றிப் புகழ்ந்தவர். இவரது திருமண வயது வந்ததும் பெற்றோர் இவருக்கு மணம் செய்ய வலேரியன் என்பரை நிச்சயித்தனர். இவர் எவ்வளவோ மறுத்தும், "இயேசுவே என் மணவாளன்" என்று கூறியும் விடவில்லை. வலேரியனின் சகோதரனான "திபேரியஸ்" என்பவரும் இயேசுவின்பால் நம்பிக்கைக் கொண்டு திருமுழுக்குப் பெற்றார்.

அக்காலத்தில் கொடுங்கோல் அரசன் கிறிஸ்தவர்களை துன்புறுத்திக் கொன்றான். குவியல் குவியலாக கிடந்த மறைசாட்சிகளின் உடல்களை நமது புனிதையும் வலேரியனும் நல்லடக்கம் செய்தனர். இதையறிந்த அரசன் செசிலியாவையும், வலேரியனையும் கிறிஸ்துவை மறுதலிக்க துன்புறுத்தினான். புனித செசிலியா இயேசுவே "உண்மையான

தெய்வம்" என்று உரத்தக் குரலெழுப்பி அவரைக் கொன்றுவிடுவதாகக் கூறியும் உடலை கொல்பவரைக் கண்டு அச்சப்பட வேண்டாம், உடலையும் ஆன்மாவையும் கொல்பவரைக் கண்டு அச்சப்படுங்கள்" என்று கூறி அதிகமாக கடவுளைப் போற்றித் துதித்தார். கொதிக்கும் நீரில் இறக்கவும், மூன்றுமுறை கழுத்தை வெட்டியும் உயிர்துறக்காமல் புனிதை செசிலியா மூன்றுநாள் கழித்து இயேசுவை புகழ்ந்துப் பாடியே உயிர் நீத்தார். பாடகர்கள், இசை கலைஞர்கள், அனைவருக்கும் பாதுகாவலியாக உள்ள புனித செசிலியாவை தியானித்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, எம்மை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் திருஅவையை காக்கும் தூண்களாகவும், தாய் அன்னை மரியாவின்மேல் பக்திக்கொண்டவர்களாகவும், இருக்க அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மையின் இறைவா, பாவ சூழலில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் இவ்வுலக மக்களுக்கு ஞானத்தை அளித்து தூய்மையாக வாழ்ந்தால் மறுவாழ்வில் உன்னதத்தை அடையமுடியும் என்ற நம்பிக்கைச் சுடரொளி வீச அருள்புரிய வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, நோய்களின் பிடியில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் முதியோர்களையும், ஊனமாக பிறந்த அனைத்து சிறார்களையும் உமது கருணைக் கண்கொண்டு சுகமளித்தருளவும், நம்பிக்கையுடன் அவர்கள் தங்கள் வாழ்நாளை கழிக்க மனஉறுதியை அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 24.11.2024 இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. தானி. 7: 13-14 II. தி.வெ. 1: 5-8 யோவா. 18: 33-47

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று தாயாம் திருஅவை அனைத்துலக அரசராம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெருவிழாவை கொண்டாடுகிறது. இன்றைய இறைவழிபாட்டின் வாசகங்கள் அனைத்தும் இயேசு அரசர், அவர் என்றுமுள்ள அரசர், அவரது அரசுக்கு முடிவேஇராது என்பதை எடுத்துரைக்கின்றது. இன்றைய வாசகங்கள் "அகரமும் னகரமும் நானே" கடவுளாகிய ஆண்டவர் இருந்தவரும், இருக்கின்றவரும், வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவரும் அவரே என்று எழுதப்பட்டுள்ளது. நற்செய்தி வாசகத்தில் பிலாத்து வாயிலாக தெள்ளத் தெளிவாக இயேசு யூதரின் அரசனா? என்று கேட்பதோடு இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது சிலுவையின்மேல், இவர் யூதரின் அரசன் என்று எழுதப்பட்டிருந்தது. இது இயேசுவை அரசர் என்று உறுதிப்படுத்துகின்றது.

இயேசுவை அரசராக ஏற்றுக்கொள்ளும் நாம் அவரிடம் விளங்கிய பண்புநலன்கள் சிறப்பான மதிப்பீடுகளில் நாமும் ஏற்றுக்கொண்டு அதன்படி வாழவேண்டுமென்பதே அவரது விருப்பம். அவ்வாறு வாழும் போது இயேசுவும் நம்மைப் பார்த்து, இன்று என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று கூறுவார். நீதியும் அன்பும் கொண்ட அரசு உண்மையும், மேன்மையும் நிறைந்த அரசு போன்ற இறையாட்சிக்குட்பட்ட இயேசுவின் மதிப்பீடுகளை நமது வாழ்வாக்கி இறையரசை துணைவரிடத்திலும் பரப்பிட நிலைநிறுத்திட இறையாட்சியில் நமக்கும் பங்குண்டு. எனவே இயேசுவை நமது இல்லத்தில், உள்ளத்தில் அரசராக வீற்றிருந்து ஆட்சி செலுத்த இத்திருப்பலி வழியாக நம்மை சமர்ப்பித்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்கள் ஆண்டவர் இயேசுவை அகில உலக அரசராகக் கொண்டாடும் இந்நாளில், இயேசுவை எங்கள் இதயத்திலும், இல்லத்திலும் அரசராக ஏற்று அவரது அரசு இந்த உலகில் பரவ உழைக்கும் அனைவருக்கும் தூய ஆவியார் துணையிருந்து வழிகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஏழை எளியோருக்குத் தன்னையே இணைத்துக் கொள்ளுகின்ற எங்கள் அரசராகிய இயேசுவே, இன்னலில் உழலும் மனிதருக்கு உதவி செய்யும் தாராள மனத்தை நாட்டையாளும் தலைவர்களுக்கு அளித்து வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. எங்கள் நித்திய ஆயரும் அரசருமாகிய இயேசுவே, மூவுலகிற்கும் அரசராகிய நீர், மனிதனாக வாழ்ந்தபோது கடைப்பிடித்த எளிமையையும் தாழ்ச்சியையும் எங்கள் வாழ்விலும் கடைப்பிடிக்க உமதருளைப் பொழிந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. அமைதியின் அரசரே அமைதியின் தூதர்களாய் எங்களைப் பயன்படுத்தும் எனும் இறைவேண்டல், ஒவ்வொரு மனிதரின் மனதிலும் உருவாக வேண்டுமென்றும், அனைவரும் பகையின்றி, போரின்றி நேசக்கரம் நீட்டி ஒற்றுமையுடன் செயலாற்றவும் வேண்டிய நல் மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 30.11.2024 புனித அந்திரேயா திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, இன்று புனித அந்திரேயா விழாவை சிறப்பிக்க திருஅவை நம்மை அழைத்துள்ளது. நமது பணி இயேசுவைப்போலும் அந்திரேயாவின் சாட்சிய வாழ்வினைப் போலவும் வாழ கடமைப்பட்டுள்ளோம். ஒன்றைக் கண்டு நம்புகிறதைவிட காணாமல் பற்றுறுதியோடு நம்புகிறவர்கள் பேறுபெற்றவர்கள் என திருநூ ல் கூறுகிறது. அந்திரேயா என்றால் மனிதத்தன்மை என பொருள்படும்.

இவர் முதல் நூற்றாண்டில் பெத்சாயிதா ஊரில் பிறந்து வாழ்ந்தவர். கலிலேயா கடலில் மீன்பிடி தொழில் செய்து வந்தவர். பேதுருவின் சகோதரர் திருமுழுக்கு யோவானின் அருளுரைகளை கேட்டு மனம்மாறி அவரின் சீடரானார். பின் யோவான் இயேசு வருவதைப் பார்த்து "இவரே இறை ஆட்டுக்குட்டி" என சுட்டிக் காட்டியபோது உடனே பின்தொடர்ந்து அவரோடு இணைந்து பயணித்து அவருக்குப் பின்னும் அவரைப் பற்றி அவரது வாழ்வு பணிகளைப் பற்றி எடுத்துரைத்து (அறிவித்து) பலரை ஈர்த்து இணைத்தார். ஓர் இரவு பகல் இறை இயேசுவோடு தங்கி இறையனுபவம் பெற்றவர். தனது சகோதரர் பேதுருவையும் அழைத்து வந்தவர்.

தூய ஆவி வருகைக்குப்பின் கப்பதோனியா, கலாத்தியா, மாசிதோனியா, பைசாந்தியா பேரரசு மற்றும் கருங்கடலின் வடப் பகுதியிலுள்ள சித்தியா பகுதியிலும் நற்செய்தி அறிவித்து பலரை மனம் மாற்றினார். அப்போது அகாய் மாநில ஆளுநர் எகீசு என்பவரின் மனைவியும் சகோதரரும் உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் இவர் செபித்து குணம் பெற்றதால் இருவரும் இயேசுவை ஏற்றனர். இது ஆளுநருக்கு எரிச்சலும் வெறுப்பையும் ஏற்படுத்தியதால் சிறையிலிட்டு சித்தரவதை செய்து சிலுவையில் அறைய ஏற்பாடு செய்தார். ஆனால் இயேசுவே என்னை அறையக் கூடாது அதற்கு நான் தகுதியற்றவன் எனக் கூறியதால் எக்ஸ் என்ற சிலுவை மரம் தயாரித்து அதில் ஆணி கூடாது, ஆகவே கயிற்றினால் இறுகக் கட்டி பசி தாகத்தோடு வைத்து மிகக் கொடுமையாகக் கொன்றனர். இவர் பற்றுறுதியோடு தன்னை அர்ப்பணித்து இறைவனை மகிமை மாட்சிமைப்படுத்தினார். நாமும் இவரின் உறுதியான நம்பிக்கையைக் கேட்டு இத்திருப்பலியில் இறையருளை வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எமது திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் புனித அந்திரேயாவின் நிலைப்பாட்டில் பற்றுறுதியோடு நின்று அனைத்து மக்களையும் இறைவன்பால் ஈர்த்து அன்பு அறச் செயல்களால் உலகை உருமாற்றம் செய்ய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, திருமுழுக்கால் உம்மோடு இணைந்துள்ள மக்கள் அனைவரும் தம் வாழ்நாளில் இறையன்பிலும் பிறரன்பிலும் நிலைத்து வாழவும், உலகிலும், குடும்பங்களிலும் அமைதி நிலவும்படி அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. நன்னெறியைப் போதித்த இறைவா, சிறுவயது முதல் நீர் இறை ஞானத்திலும், கீழ்ப்படிதலிலும், தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்கினீர். அவ்வாறே எங்கள் பிள்ளைகளும், ஒழுக்கத்திலும், பணிவிலும், தெய்வ பயத்திலும் சிறந்தவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

### முடிவில்லா வாழ்வு பெறுபவர் யார்?

திரு. டே. ஆக்னல்

கத்தோலிக்கத் திருஅவை இறந்த நம்பிக்கையாளர்களை நவம்பர் மாதம் முழுவதும் சிறப்பாக நினைவுக் கூர்ந்து செபிக்க நம்மை அழைக்கிறது. "இறப்பினால் கிறிஸ்தவரின் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி, அது முடிந்து போவதில்லை" என்பதே நமது நம்பிக்கை. கடவுளின் அன்பை ஏற்றுக்கொண்டோர் மற்றும் அவரிடமிருந்து விலகிச் சென்றோருக்கு விதிக்கப்பட்ட நிலைகளாக விண்ணகமும் நரகமும் கூறப்படுகின்றன. இரு நிலைகளுமே நித்தியமானவையாக இருக்கின்றன என்று கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி போதிக்கிறது. அதாவது, முடிவில்லா வாழ்வு அல்லது தண்டனை மனிதருக்கு உண்டு. மனிதர்கள் என்ற முறையில், நாம் உடல் மற்றும் ஆன்மாவைக் கொண்டவர்களாக இருக்கின்றோம். நமது உடலின் செயல்பாடு முடிவுற்று, நமது ஆன்மா (ஆவி) உடலிலிருந்து வெளியேறுவதை நாம் இறப்பு என்று அழைக்கிறோம். இறந்தோரின் உடல் சிதைந்து அழிவுறத் தொடங்கும், ஆனால் நமது ஆன்மாவோ என்றென்றும் வாழும். உலகின் முடிவில் இறுதி உயிர்த்தெழுதல் நிகழும்பொழுது, நமது உடல் மறுவுரு பெற்று நமது ஆன்மாவோடு மீண்டும் ஒன்றிக்கும். இவ்வாறு உயிர்த்தெழுந்ததும் உடலோடு விண்ணகத்தில் நுழைந்து முடிவில்லா பேரின்ப வாழ்வை உரிமையாக்கி மகிழ்வோம்.

திருமுழுக்கின் வழியாக நாம் தொடக்கப் பாவத்திலிருந்து விடுவிக்கப் பெற்றாலும், பாவத்தால் விளைந்த உடல்சார் இறப்பு இன்றளவும் தொடர்கிறது. முதல் பெற்றோர்களால் ஏற்பட்ட "வீழ்ச்சியின் விளைவாக மனித இயல்பு வலுவிழந்து காயமுற்று, அறியாமைக்கு உள்ளாகி, துன்பம், இறப்பின் ஆதிக்கம், பாவத்துக்கும் சாவுக்கும் ஆட்பட்டுள்ளது" என்று கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி கூறுகிறது. மனிதர்கள் வேட்கைக்கு ஆளாகி பாவம் செய்வதற்கானத் தூண்டுதலைப் பெறுகின்றனர். மேலும், கடவுளின் இரக்கத்தை ஏற்க அல்லது மறுக்க ஒரு மனிதருக்கு தரப்படும் காலம் இறப்புடன் முடிவுறுகிறது. "இறைத் திட்டத்தோடு தமது மண்ணக வாழ்வைச் செயலாக்கவும், தமது இறுதி இலக்கைத் தீர்மானிக்கவும் மனிதருக்கு கடவுள் வழங்கிய அருள் மற்றும் இரக்கத்தின் காலமாகிய, அவரது மண்ணகத் திருப்பயணத்தின் முடிவாக இறப்பு இருக்கிறது. நமது மண்ணக வாழ்வின் ஒற்றைக் கடவை முடிந்ததும், நாம் வேறொரு மண்ணக வாழ்வுக்குத் திரும்ப மாட்டோம்: "மனிதருக்கு ஒருமுறை மட்டுமே இறப்பு விதிக்கப்பட்டுள்ளது". இறப்புக்குப் பிறகு "மறுபிறவி" எதுவும் இல்லை. நமது இறப்பின் நேரத்துக்கு நம்மைத் தயார் செய்ய திருஅவை நம்மை ஊக்குவிக்கிறது" என்பதே மறைக்கல்வி படிப்பினை.

"மனிதர் ஒரே முறை சாவுக்கு உட்படுகின்றனர், அதன்பின் தீர்ப்பு வருகிறது." (எபி 9:27) என்று விவிலியம் கூறுகிறது. நமது உடலின் இறப்புக்குப் பிறகு இரண்டு விதமான தீர்ப்புகள் உள்ளதாக கத்தோலிக்கத் திருஅவை எடுத்துரைக்கிறது. முதலாவது, இறந்த மனிதரது ஆன்மாவின் விதியைத் தீர்மானிக்கின்ற "தனித் தீர்ப்பு". "ஒவ்வொரு மனிதரும் தாம் இறக்கின்ற அதே கணத்தில், கிறிஸ்துவோடு தமது வாழ்வை ஒப்பிடும் தனித் தீர்ப்பில், தமது அழியாத ஆன்மாவில் தமது நித்தியக் கைம்மாறு பெறுகின்றனர்: விண்ணகத்தில் பேறுநிறை நிலையில் அல்லது என்றுமுள்ள தண்டனையில் நுழைவதற்கு" (கதிம 1022). நாம் இறக்கின்ற பொழுது பாவங்கள் ஏதுமற்றத் தூயநிலையில் இருந்தால் விண்ணக வாழ்வுக்கும், நமது பாவங்களுக்கு மன்னிப்பு பெற்று கழுவாய் தேடும் நிலையில் இருந்தால் தூய்மைபெறும் (உத்தரிக்கும்) நிலைக்கும், பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டாமல் இழிவான நிலையில் இருந்தால் நரக நெருப்புக்கும் ஆண்டவர் நம்மைத் தீர்ப்பிடுவார். இங்கு நமது பாவங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையே மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. தீயோரின் அழிவில் ஆண்டவர் மகிழ்ச்சி கொள்வதில்லை, அவர்கள் மனந்திரும்பி வாழ்வுபெற வேண்டும் என்பதே அவரது உள்ளத்தின் ஏக்கமாகவும் ஆவலாகவும் இருக்கின்றது.

உடல் இறக்கின்ற பொழுது, இறந்தவரின் ஆன்மா, உடலின்றி, நரகத்திற்கு அல்லது விண்ணகத்திற்குத் தீர்ப்பிடப் பெறுகிறது. விண்ணக நிலைக்குள் நேரடியாகவோ அல்லது தூய்மையுறல் (உத்தரிப்பு) நிலையின் வழியாகவோ நுழையலாம். இரண்டு விதத்திலும், தகுதி பெறுவதற்கு ஒருவர் எல்லா பாவத்திலிருந்தும் விடுதலை பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், "...இறப்புக்குப் பிறகு மனிதருக்கு மனந்திருந்தல் இல்லை" (கதிம 393) என்பது உறுதி. கடவுளை முகமுகமாகப் பார்க்கின்றவர் "பேறுநிறை காட்சியை" பெற்றுள்ளார் என்கிறோம், விண்ணகத்தில் உள்ள அனைத்து புனிதர்களும் இந்த நிலையில் இருக்கின்றனர்.

"கடவுளின் அருளிலும் நட்புறவிலும் இறக்கின்றவர்கள் நேர்த்தியாகத் தூய்மையுற்று கிறிஸ்துவோடு என்றென்றும் வாழ்கின்றனர். கடவுள் இருக்கின்றது போலவே அவரை முகமுகமாகக் காண்கின்றனர்... மிகத் தூய திரித்துவத்துடனான இந்த நேர்த்தியான வாழ்வே விண்ணகம் என்று அழைக்கப்படுகிறது" (கதிம 1023-24). "கடவுளின் அருளிலும் நட்புறவிலும் இறந்தவர்கள் இன்னும் நேர்த்தியாகத் தூய்மையுறாத நிலையிலும், நித்திய மீட்புக்குத் தகுந்தவர்களே. ஆனால் இறப்புக்குப் பிறகு அவர்கள் தூய்மையாக்கப் பெற்று, விண்ணகத்தில் நுழைவதற்கான தூயநிலையை அடைகின்றனர்" (கதிம 1030-31).

இரண்டாவது, உலகத்தின் முடிவு நிகழும் பொழுது கிறிஸ்து மீண்டும் வருகையில் மனிதகுலம் முழுவதன் மீதும் நிகழும் "பொதுத் தீர்ப்பு". "முழு படைப்பு வேலையின் மற்றும் முழு மீட்பின் அருள்திட்டத்தின்

பொருளை நாம் அறிவோம், அனைத்தையும் அதன் இறுதி முடிவை நோக்கி நடத்திச் செல்லும் கடவுளது பராமரிப்பின் வியத்தகு வழிகளைப் புரிந்துகொள்வோம். கடவுளின் நீதியானது அவரது படைப்பினங்களால் இழைக்கப்பட்ட அநீதிகள் எல்லாவற்றின்மீதும் வெற்றி பெற்றதையும், மேலும் கடவுளின் அன்பு இறப்பைவிட வலுவானது என்பதையும் இறுதித் தீர்ப்பு வெளிப்படுத்தும்" (கதிம 1040). எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளை அன்பு செய்வதும், நம்மைப் போன்று பிறரிடம் அன்பு செலுத்துவதும் நாம் விண்ணகத்தை அடைய உதவும் செயல்பாடுகளாக இருக்கின்றன. "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டுமென விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத் 7:12) என்ற இயேசுவின் பொன்விதியைப் பின்பற்றுவதே, பிறரிடம் அன்பு செலுத்துவதற்கான அளவுகோலாகும். "என் தந்தையிடம் ஆசி பெற்றவர்களே வாருங்கள்" என்ற அழைப்புக்குத் தகுந்தவர்களாக வாழ்வை அமைத்துக் கொள்கிறவர்கள் மட்டுமே முடிவில்லா நித்தியப் பேரின்ப வாழ்வை உரிமையாக்கி மகிழலாம்.

## புனித ஆர்த்திமெதே சாத்தி
### சலேசிய அருட்சகோதரர்களில் முதல் புனிதர் - வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

தொடக்க காலச் சலேசிய சகோதரரான இவர், சிறுவயதிலேயே தாம் பிறந்த குடும்ப வறுமையின் காரணமாகக் கடுமையான தியாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தனது 9 வயது முதலே கூலி வேலைகளைச் செய்தவர். பிழைப்புப் தேடி இவரது குடும்பம் 1897ல் அர்ஜென்டினாவின் பிளாங்கா என்னுமிடத்திற்கு குடிபெயர்ந்தது. அவ்வூரின் பங்குத்தலம் சலேசியர்களின் பொறுப்பில் இருந்தது. தினமும் திருப்பலிக்கு சென்றுவரலானார். நாளடைவில் இறையழைத்தலை உணர்ந்த சாத்தி, சலேசிய சபையில் இணைந்து சலேசிய அருட்சகோதரராக தனது பிறரன்புப் பணியை, குறிப்பாக இளையோர் பணியைத் துவங்கினார்.

**துன்பங்களை எதிர்கொள்ளும் நம்பிக்கை:** அர்ஜென்டினாவின் புவெனஸ் அயர்ஸ் மாகாணத்தின் தெற்குப் பகுதியில் உள்ள பாஹியா பிளாங்கா நகரத்திலிருந்து, இத்தாலியின் ரெஜியோ-எமிலியா மாகாணத்தில் உள்ள பொரெட்டோ நகரத்தை 12,000 கிலோமீட்டர் பிரிக்கிறது. அந்த நேரத்தில் மில்லியன் கணக்கான குடும்பங்களைப் போலவே, சாத்தியின் குடும்பமும் சிறந்த வாழ்க்கை நிலைமைகளைத் தேடி அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தனர். புதிய நிலப்பரப்பு, புதிய கலாச்சாரம் மற்றும் புதிய மொழி இந்த இளம் ஆர்த்திமிதேவை வரவேற்றது, தங்கள் தாயகத்தை விட்டு வெளியேறும் ஒவ்வொரு புலம்பெயர்ந்தவர்களும் அனுபவிக்கும் சில கனவுகள் மற்றும் கஷ்டங்கள், ஏக்கங்கள் மற்றும் மகிழ்ச்சிகள் ஆகியவை இந்த இளம் துறவிக்கும் இருந்தன.

1830-1930க்கு இடையில் குடியேறிய 52 மில்லியன் ஐரோப்பியர்களில், சுமார் 11 மில்லியன் பேர் லத்தீன் அமெரிக்காவில் தரையிறங்கினர். பெரும்பாலானவர்கள் வடக்கு இத்தாலி மற்றும் ஸ்பெயினிலிருந்து வந்தவர்கள். அவர்களில் பாதி பேர், சுமார் 5 மில்லியன் இத்தாலியர்கள், அர்ஜென்டினாவில் குடியேறினர். "போ" எனப்படும் ஆற்றங்கறை சிறிய விவசாய நகரமான போரெட்டோவும் விவசாய நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. மேலும் சாத்தி குடும்பம் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டதால் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் வயல் வேலைக்குச் சென்றனர். ஆர்த்திமிதே கடின உழைப்பாளி மற்றும் சுய தியாகம் செய்யும் விவசாயிகளின் ஏழை வாழ்க்கையை வாழ்ந்தார். மற்ற இத்தாலியர்களைப் போலவே, இவர் அமெரிக்காவை ஒரு வரப்பிரசாதம் என்றே பார்த்தார். ஏற்கனவே Bahía Blanca இல் குடியேறிய ஆர்த்திமிதேயின் மாமா ஜுவானே சாத்தி, கூறிய அனுபவங்கள் இவருக்கு பெரும் உற்சாகத்தை தந்தது.

**தாயகத்தின் நினைவுகளோடு:** 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சாத்தி குடும்பத்தினர் போன்ற புலம்பெயர்ந்தோர் வறுமை மற்றும் நிச்சயமற்ற நிலையை அனுபவித்தனர். அவர்கள் பிறந்த இடத்துடன் உறவுகளைப் பேணும் முயற்சியில், உள்நாட்டில் புதிய உறவுகளை பாலத்தை அமைத்துக்கொண்டனர். ஒரு அன்பரின் வழியாக தன் சொந்த ஊரான பொரோட்டோ பங்குதந்தைக்கு, இந்த புலம்பெயர்ந்த இடத்தில், அவரது புதிய வாழ்க்கைச் சூழல் என அனைத்தையும் பகிர்ந்துகொண்டார். இந்த ஆபத்தான வேலை, முழுமையற்ற படிப்பு, கடுமையான உடல்நலக் கஷ்டங்கள், எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற தன்மை இதையெல்லாம் எதிர்கொண்டு, அவர் மீண்டு வர இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. இறுதியாக, 1914 இல், அவர் ஆர்ஜின்டைன் குடிமகனாக "குடியுரிமை அட்டை" பெற்றார். 1934 இல், தொன் போஸ்கோ புனிதர் பட்டம் பெற்ற சந்தர்ப்பத்தில்தான்,அவர் இத்தாலிக்குத் திரும்பி தனது சொந்த ஊருக்குச் சென்றார்.

**ஒரு புலம்பெயர்ந்த புனிதர் (AN IMMIGRANT SAINT):** அருட்சகோதரர் சாத்தி, குறிப்பாக லத்தீன் அமெரிக்காவின் பிற பகுதிகளிலிருந்து உலகின் பிற பகுதிகளைப் போலவே, சலேசிய பணித்தளங்கள் புலம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சந்திப்பு மற்றும் நம்பிக்கையின் உத்திரவாதம் மற்றும் அவர்களின் குழந்தைகள், இளைஞர்களுக்கான கல்வி மற்றும் பொழுதுபோக்கு இடமாகவும் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து சமூக ஊடக மற்றும் திறன்களைப் பயன்படுத்தி ஒன்றிணைத்து புதிய சமூகங்கள் மற்றும் கலாச்சாரங்களில் வலுவான, பலதரப்பட்ட சமூகங்களை மீள்தன்மை கொண்ட நபர்களுடன் சேர்ந்து சிறந்து பணியாற்றினார். இதனால் அர்ஜென்டினாவின் புலம்பெயர்ந்தோர்களின் முன்னேற்றத்தில், ஆர்த்திமிதே புதிய வரலாற்றை உருவாக்கியுள்ளார்.

சலேசியர்களுடன் இத்தகையோருக்கான ஒரு நிலையான முழுமையான வாழ்க்கையை திட்டத்தை வளர்த்தெடுத்தார். பின்னர் வரலாறு "வைத்மாவில்" இவரது நிபந்தனையற்ற சலேசிய சேவையில், கடவுளுக்கும் ஏழைகளுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை பாதை, அதற்காக அவர் "எல்லா ஏழைகளின் உறவினர்" என்றும் மக்களுக்கு நெருக்கமான ஒரு எளிய துறவி என்பதை எடுத்துக் கூறியது. இன்றும் என்றும் ஆர்த்திமிதே அங்கு நினைவு கூறப்படுகிறார்.

ஒரு சலேசியராக இவருக்கு தரப்பட்ட பொறுப்புகளுள், காச நோயால் அவதியுற்று வந்த ஓர் இளங்குரு மாணவரைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதும் ஒன்றாக இருந்தது. அப்பணியில் ஈடுபட்டு வந்தபோது, இவரும் காச நோயால் பாதிக்கப்பட நேர்ந்தது. சிகிச்சைக்காக வியேத்மா என்ற இடத்தில் சான்ஜோஸே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அம்மருத்துவமனையில் பணியாற்றி வந்த மருத்துவரும் குருவானவருமான அருட்திரு. காரோனே இவரை சிறப்பாகக் கவனித்துக்கொண்டார். தான் குணம் பெற்றால், தனது எஞ்சிய வாழ்நாட்களை நோயுற்றோரின் சேவைக்காக அர்ப்பணிப்பதாக சகாய அன்னையிடத்தில் நேர்ந்துக்கொண்டார். அன்னையின் அருளால் குணமடைந்த இவர், 1908ல் தமது வார்த்தைப்பாட்டை எடுத்துக்கொண்ட ஆர்த்திமிதே சாத்தியை, அதே மருத்துவமனைக்கு சொந்தமான மருந்தகத்தைக் கவனிக்கும் பொறுப்பு கிடைத்த சில ஆண்டுகளில் அந்த மருத்துவமனை முழுவதும் இவரது பொறுப்பின்கீழ் வந்தது.

அதுமுதல் இவரது புனிதத்துவத்திற்கான பயிற்சிக்களமாகவும், நோயுற்றோருக்காக ஆர்த்திமிதே தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொள்ளும் பணித்தலமாக அமைந்தது. கடின உழைப்பின் காரணமாகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுத் தமது 70ம் வயதில் 1951ல் ஆர்த்திமிதே சாத்தி இறைவனடிச் சேர்ந்தார். 2002ல் திருஅவை இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தியது. கடந்த மாதத்தில்தான் இவரை புனிதராக உயர்த்தினார் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் என்பதும் சலேசிய சபை வரலாற்றில் அருட்சகோதரராக துறவற அழைப்பு பெற்று பணியாற்றும் எண்ணற்ற அருட்சகோதரர்களில் தோன்றிய முதல் புனிதரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

## பூவொரு உலகின் அரசர் கிறிஸ்து இயேசு

திரு. பி. விக்டர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி மலையில் சிலுவையில் அறையப்பட்ட வேளையில், அவரைக் குறித்த குறிப்பு ஒன்று எழுதப்பட்டு சிலுவையில் இயேசுவின் தலைக்குமேல் பொருத்தப்பட்டது. அதில் "நாசரேத்தூர் இயேசு, யூதர்களின் அரசன்" என்று எழுதப்பட்டு இருந்தது (யோவா 19:19). இயேசு இவ்வுலகில் பிறந்தபோது கிழக்கு

திசைகளிலிருந்து ஞானியர், எருசலேமுக்கு வந்து ஏரோது அரசனிடம் "யூதர்களின் அரசாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம், அவரை வணங்க வந்தோம்" என்றனர் (மத்.2:2). தூய மத்தேயு தனது நற்செய்தி நூல் எழுதும் போதுக்கூட "தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்" என்றுதான் தொடங்குகிறார். அதாவது அபிரகாமின் வாரிசின் வாரிசான யாக்கோபின் புதல்வர்களில் ஒருவரான யூதாவின் இனத்தில் வந்த பேரரசர் தாவீதின் வாரிசாகக் குறிப்பிடப்படுகிறார். யாக்கோபின் பிள்ளைகளின் வாரிசால் எபிரேயர் என்று அழைக்கப்பட்டனர். பின்நாட்களில் "இஸ்ரயேல்" என்றும் அழைக்கப்பட்டனர். தொடர்ந்து பின்நாட்களில் இஸ்ரயேல் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட பின்பு யூதர்கள் என்கிற பொதுச் செயலில் அழைக்கப்பட்டனர். எனவே இயேசுவின் காலத்தில் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் யூதர்கள் என்றே அழைக்கப்பட்டனர். அதனால்தான் பிலாத்து இயேசுவை யூதர்களின் அரசன் என்று சிலுவையில் எழுதி வைத்தனர்.

யாக்கோபு தனது மகன் "யூதாவுக்கு" தனது இறுதி ஆசீரை வழங்கியபோது "யூதா நீ ஒரு சிங்கக்குட்டி, அரசுரிமை உடையவர் வரும் வரையில் மக்களினங்கள் அவருக்குப் பணிந்திடும் வரையில் யூதாவைவிட்டு செங்கோல் நீங்காது" என்றார். (கலா.39:10). யாக்கோபு குறிப்பிட்ட "அரசுரிமை உடையவர்" கிறிஸ்து இயேசுவே ஆவார். "யூதாவின் குலத்தில் அரசர்கள் தோன்றி யூத மக்களை ஆள்வார்கள்" அரசுரிமை உடைய "இயேசு கிறிஸ்து வரும்வரையில் யூதாவை விட்டு செங்கோல் நீங்காது" என்கிற வாக்கு இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியது. ஏனெனில் இயேசுவுக்குப் பிறகு யூதர்களல் அரசர் என்று யாரும் அழைக்கப்படவில்லை. ஆம், "ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே அரசர்" அவர் இவ்வுலகிற்கு மட்டும் அரசரல்ல, விண்ணகம், மண்ணகம், கீழுலகம், மேலுலகம் அனைத்திற்கும் அரசராவார்.

**இயேசு விண்ணக அரசராவார்**

கிறிஸ்து இயேசு விண்ணுலகிற்கு அரசரா? புனித யோவான் தனது சரிசனத்தில் ஒரு காட்சியைக் காண்கிறார். அதுபற்றி கூறும்போது "நான் விண்ணகம் திறந்திருக்கக் கண்டேன், அங்கே ஒரு வெண்குதிரை காணப்பட்டது. அதன்மேல் ஒருவர் அமர்ந்திருந்தார். "அரசர்க்கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர்" என்ற பெயர் அவருடைய ஆடையிலும் கொடையிலும் எழுதப்பட்டு இருந்தது. "கடவுளின் வாக்கு" என்பது அவரது பெயர் என்று விவரிக்கின்றார். (திவெ. 19: 11,13,16). அவருக்கு விண்ணகத்திற்கு வரவிருக்கும் மக்களுக்கு தீர்ப்பளிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது கடவுளின் மரிமையின் சுடரொளியாகவும் அவருடைய இயல்பின் அச்சப்பதிவாகவும் விளங்கும் இயேசு விண்ணகத்தில் பெருமைமிக்க கடவுளின் வலப்பக்கம் வீற்றிருக்கிறார்

அவர் தனது அரியணையை விண்ணகத்தில் நிறுவியுள்ளார். அவரது அரசு அனைத்தின்மீதும் பரவியுள்ளது (திப. 103:19) தமக்கும் பிறகு தனது நற்செய்தி பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று தமது சீடர்களுக்குக் கட்டளையிட்ட இயேசு அவர்களோடு பேசிய பின்பு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார் (மாற்கு 16:18). அவர் நான் வெற்றிப்பெற்று எனது தந்தையின் அரியணையில் அவரோடு வீற்றிருப்பதுபோல வெற்றிபெரும் எவருக்கும் எனது அரியணையில் என்னோடு வீற்றிருக்கும் உரிமை அளிப்பேன்" (விப.3:21)என்றுநமக்கு அழைப்புவிடுத்துள்ளார். மேலே கூறியவற்றிலிருந்து இயேசு "விண்ணுலகிற்கு அரசர்" என்பது சந்தேகத்துக்கிடமின்றி எண்பிக்கப்படுகிறது. குாரணம் வானதூதர்களையும், அதிகாரங்களையும், வல்லமைகளையும் தமக்குப் பணிய வைத்துள்ளார் (1பேதுரு 3:22).

## இயேசு இந்த உலகின் அரசர்

இயேசு தமது திருத்தூதர்களுக்கு இறுதி அறிவுரையை கூறும்போது "எல்லா அதிகாரங்களும் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்றுகூறி தான் இவ்வுலகிற்கும் அரசர் என்பதை எடுத்துக் கூறினார். யோவான் தனது திருக்காட்சியில் விண்ணகத்தில் ஒரு குரலைக் கேட்கிறார். அது "உலகின் ஆட்சியுரிமை நம் ஆண்டவருக்கும் அவருடைய மெசியாவுக்கும் உரியதாயிற்று. அவரே என்றென்றும் ஆட்சிபுரிவார்" என்று முழங்கியது. (திவெ.11:15) மேலும் கிறிஸ்து இயேசு இந்த மண்ணுலகின் அரசர் என்பதை இயேசுவுக்குமுன் கி.மு. 520 ஆண்டுகளில் வாழ்ந்த இறைவாக்கினர் சக்கரியா எடுத்துக் கூறியுள்ளார். "இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர், வெற்றிவேந்தர், எளிமையுள்ளவர், கழுதையின்மேல், கழுதைக் குட்டியாகிய மரியின்மேல் ஏறிவருகிறார் என்றும், அவர் வேற்றினத்தாருக்கு அமைதியை அறிவிப்பார், அவரது ஆட்சி ஒருகடல் முதல் மறுகடல்வரை செல்லும்" (சக் 9: 9-10) என்றார்.

கிறிஸ்து இயேசு விண்ணுலகிற்கும், மண்ணுலகிற்கும் அரசர். இயேசு தன்னைத் தாழ்த்தி சாவை ஏற்கும் அளவிற்கு தந்தையாம் கடவுளுக்கு கீழ்ப்படிந்து சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டு தந்தையாம் கடவுள் எல்லோருக்கும் மேலான பெயரை அவருக்கருளினார். இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர் கீழுலகோர் அனைவரும் மண்டியிடும்படி செய்தார். தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க கடவுளுடைய எக்காளம் முழங்க, அரசராகிய ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார். கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொள்வோர் இறந்தவர்களை முதலில் உயிர்த்தெழச் செய்து தம்முடன் அழைத்து வருவார். உடலைக் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம், என்றும், உடலைக் கொன்றப்பின் நரகத்தில் தள்ள அதிகாரமுள்ளவருக்கே அஞ்சுங்கள் என்று ஆண்டவர் தம் சீடர்களுக்கு அறிவுரைக் கூறினார்.

1. மூவுலக அரசரின் அரசாட்சி நமக்குள், நமது வாழ்வில் எத்தகைய விளைவுகளை உண்டாக்கியுள்ளது?
2. இந்த மூவுலக அரசரின் அரசாட்சியில் நமது நம்பிக்கை வாழ்வு, விசுவாச வாழ்வு கொண்டுள்ள மாற்றங்கள் என்ன?
3. மூவுலக அரசருக்கு நம்மைக் கையளிக்கும்போது, ஒப்புக்கொடுக்கும்போது நாம் அவரது ஆலோசனைகளையும், ஞானத்தையும், வழிநடத்துதலையும் பெற்றுள்ளது உண்மையா?
4. இந்த மூவுலக அரசரின் அரசாட்சியில் நம்பிக்கையாளர்களிடம் நமக்குள் எத்தகைய சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் வழங்கியுள்ளது.
5. இந்த மூவுலக அரசரின் அரசராம் கிறிஸ்து இயேசுவுக்கு நாம் எத்தகைய விதத்தில் நமது ஆராதனையையும் அவருக்கான மாட்சியையும் வெளிப்படுத்துகிறோம்?

ஒரு அரசனுக்கு மூன்று முக்கியமான தகுதிகள் இருப்பது அவசியம். முதலாவது அவர் சிறந்த வீரராகவும், எதிரிகளிடமிருந்து தனது மக்களைப் பாதுகாக்கிற அரசராகவும் இருக்கவேண்டும். படைகளின் ஆண்டவராம் இயேசு கிறிஸ்து "பயப்படாதே" என்று சொல்லி நமக்கெல்லாம் பாதுகாவலராக இருக்கிறார். இரண்டாவது, ஒரு அரசர் உணவும் உறைவிடமும் தந்து தன் மக்களைப் பராமரிக்க வேண்டும். மூன்றாவதாக, ஒரு அரசர் தனது மக்களுக்கு சிறந்த நீதி வழங்குபவராக இருப்பார். மூவுலகின் அரசராம் கிறிஸ்து இயேசுவை நன்கறிவோம். நமக்குள் எழும் கேள்விகளுக்கு விடை காண்போம். அவருக்கு ஏற்புடையவர்களாக சாட்சிய வாழ்வு வாழ முயல்வோம்.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

**அன்புகூர்ந்தார் - சுற்றுமடல்**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று இயேசுவின் திருஇருதயம் குறித்த Dilexit nos என்ற நான்காவது சுற்றுமடலில் மொத்தம் 220 எண்களில் மனித மற்றும் இறையன்பில் இயேசுகிறிஸ்துவின் திருஇருதய அன்பு குறித்து எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். கிறிஸ்துவின் அன்பு அவருடைய திருஇருதயத்தில் பிரதிபலிக்கிறது, உலகம் தன் இதயத்தை இழந்துவிட்டதாகத் தெரிகிறது, இதயத்திற்குத் திரும்புவதன் முக்கியத்துவம், இயேசுவின் செயல்கள் மற்றும் அன்பின் வார்த்தைகள், வார்த்தை மனுஉருவான நற்செய்தியின் உள்ளடக்கத்திற்குத் திரும்புதல், தாகம் தீர்க்கும் அன்பால் நிரப்பப்பட்ட புனிதர்கள் மற்றும் புனிதைகள், புனித மார்கரெட் மேரி அலகோக் பெற்ற திருஇருதய காட்சிகள், நம் சகோதர சகோதரிகளிடம் நம்மை அனுப்பும் கிறிஸ்துவின் திருஇதயத்தின் மீதான பக்தி, உலகை அன்பு செய்ய வைக்கும் பணி என்னும் பக்கத்

தலைப்புகளுடன் இடம்பெற்றுள்ள இச்சுற்றுமடலானது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செபத்துடன் நிறைவுபெறுகின்றது.

**மன்னிக்கப்பட்ட மீட்கப்பட்ட மக்களை முதன்மையாக வரவேற்கும் திருஅவை**

எல்லாரையும் மன்னியுங்கள், எப்போதும் மன்னியுங்கள், நாம் மன்னிப்பதற்காகவே இருக்கின்றோம் என்றும், திருஅவை மீட்கப்பட்ட மன்னிக்கப்பட்ட மக்களையும், கடவுளின் ஒளி, மென்மை மற்றும் ஆற்றலில் நம்பிக்கையும் அன்பும் கொண்ட மக்களை முதன்மையாக வரவேற்கின்றது என்றும் கூறினார். தூய பேதுரு பெருங்கோவிலில் உள்ள பாவமன்னிப்பு திருவருளடையாளம் வழங்கும் பொறுப்பு Frati Minori சபையினருக்கு வழங்கப்பட்டதன் 250 ஆவது ஆண்டு விழா வாழ்த்துக்களையும் கூறி மகிழ்ந்தார். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலுக்கு எண்ணற்ற மக்கள் ஒவ்வொரு நாளும் வருகின்றனர் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், தங்களது பாவத்திற்காக மனம் வருந்தும் மக்களுக்கு பணியாற்றுகின்ற மனசாட்சி திருப்பீடத்துறையின் பணி மிக முக்கியமானது என்றும் எடுத்துரைத்தார்.

**“இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்” என அடிக்கடி கூறுங்கள்**

இன்றைய உலகின் மக்களுக்கு நற்செய்தியின் ஒளியின் தேவை உள்ளது என்ற திருத்தந்தை, மறைப்பணி நடவடிக்கைகளின் பழைய பாதைகளில் நடந்துவரும் அதேவேளையில், புதிய பாதைகளைக் கண்டுகொண்டு, மக்களிடையேயான நட்புணர்வின் புதிய வழிகளை கைக்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார்.நம் விசுவாசத்தின் கனிகளையும் மகிழ்வையும் கொணரும் நற்செய்தியை தெருக்களிலும் உலகின் மூலை முடுக்குகளிலும் பிறரோடு பகிரவேண்டிய நம் கடமைகளையும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். புனித சிலுவையின் பவுலின் தனிவரத்தைக் கொண்டுள்ள திருப்பாடுகள் சபை, தன் வாழ்வு நடவடிக்கைகள் வழியாக நற்செய்தியை அறிவித்து வருகின்றது என்ற பாராட்டையும் அச்சபையின் அங்கத்தினர்களிடம் தெரிவித்தார் திருத்தந்தை

**இயக்கத்தில் இருக்கும் நீர் போல இளைஞர்கள் வாழவேண்டும்**

சோர்வடைந்து முன்னோக்கிச் செல்லாமல் தேங்கி விடும் இளைஞன் தீயவனாகின்றான் - திருத்தந்தை பிரான்சிஸ். முன்னோக்கிச் செல்வது என்பது மிக முக்கியமானது என்று அச்செய்தியில் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை அவர்கள் முன்னோக்கிச் செல்லும் இளைஞன் நன்றாக வாழ்கின்றான் என்றும், முன்னோக்கிச் செல்லாமல் நின்றுவிடும் இளைஞன் தேங்கி நிற்கும் தண்ணீர் போன்றவன் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

ஓடுகின்ற நீர் விளைச்சலையும் வளமையையும் தருகின்றது, அதுவே தேங்கியிருக்கும் நீரானது கழிவுகளையும் இறந்த விலங்கினங்களையும் கொண்டு வருகின்றது என்று எடுத்துரைத்துள்ள திருத்தந்தை அவர்கள், சோர்வடைந்து முன்னோக்கிச் செல்லாமல் தேங்கி விடும் இளைஞன் தீயவனாகின்றான் என்றும் கூறியுள்ளார். எப்போதும் முன்னோக்கிச் செல்லுங்கள் என்று வலியுறுத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், துணிவுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ இளைஞர்களுக்கு ஊக்கமூட்டியதுடன் தனக்காக செபிக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சுடர் வாசகர் போட்டி 115 சரியான விடைகள்

1. அலெக்சான்ட்ரீனா மரியா
2. புனித யூதா ததேயு
3. பார்த்திமேயு
4. லூக்கா நற்செய்தி
5. அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
6. 23ம் அருளப்பர்
7. தந்தையாம் கடவுளின் வார்த்தைகளை கபிரியேல் சொல்லது.
8. புனித 2ஆம் யோவான் பவுல்
9. சமத்துவமின்மையே
10. கிறிஸ்
11. புனித சீமோன்
12. 1875
13. அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
14. 261
15. அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr. S. Antony Samy, Bangalore

Mrs. Delsy, Pondy

Ms. Josephine, Chennai

## சுடர் வாசகர் போட்டி - 116

1. இயேசுவின் இருதயம் பற்றிய சுற்று மடலின் பெயர் என்ன?
2. "யூதர்களின் அரசாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" கூறியது யார்?
3. எக்ஸ் வடிவ சிலுவையில் கயிற்றால் கட்டப்பட்டு இறந்த மறைசாட்சி யார்?
4. "கடவுளாகிய ஆண்டவர் இருந்தவரும், ........ அவரே" பூர்த்தி செய்க?
5. மரியாளின் ஆன்மீகமாக இருந்தது என்று ஆசிரியர் எதைக் கூறுகின்றார்?
6. "இறைவா நான் புனிதையாகும் முன் என்னைச் சாகவிடாதேயும்" கூறியது யார்?
7. இலாத்தரன் திருக்கோவில் எந்த ஆண்டு அடித்தளமிடப்பட்டது?
8. அனைத்து புனிதர்கள் விழா யாருடைய காலத்தில் நவம்பர் 1ம் நாள் கொண்டாட துவங்கியது?
9. மன்னிப்பு வழங்கு திருவருளடையாளத்தின் பொறுப்பு எந்த சபையினருக்கு வழங்கப்பட்டுள்ளது?
10. நமக்கு மறுபிறவி இருக்கின்றதா?
11. எகீசுவின் மனைவியும், சகோதரரும் யாருடைய செபத்தால் குணம் பெற்றனர்?
12. கொதிக்கும் நீரில் இறக்கியும், தலைவெட்டப்பட்டும் 3 நாட்கள் உயிரோடிருந்த புனிதர் யார்?
13. புனித பவுலின் பேராலயம் எந்த அரசரால் கட்டப்பட்டது?
14. புனித ஆர்தெமெதே சாத்தியின் உடல் எங்கு வைக்கப்பட்டுள்ளது?
15. முடிவில்லா நரகத்திற்கு செல்பவர்கள் யார் என்று ஆசிரியர் கூறுகிறார்?


### தீபகச் சுடர்

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 200/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
.........................................
.........................................
.........................................

# அடுத்த சுடரில்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

திருவருகைக் காலம் முதல் ஞாயிறு
புனித பிரான்சிஸ் சவேரியார்
அருளாளர் பிலிப்பு ரினால்டி
புனித நிக்கோலாஸ்
திருவருகைக் காலம் 2ம் ஞாயிறு
புனித கன்னி மரியாவின் அமல உற்பவம் பெருவிழா
சிலுவையின் புனித ஜான் அருள்பணியாளர்
திருவருகைக் காலம் 3ம் ஞாயிறு
திருவருகைக் காலம் 4ம் ஞாயிறு
ஆண்டவருடைய பிறப்பு பெருவிழா
புனித ஸ்தேவான் விழா
புனித யோவான் திருத்தூதர் விழா
புனித மாசில்லாக் குழந்தைகள் விழா
இயேசு, மரியா, யோசேப்பின் திருக்குடும்ப விழா

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

புனித பிலிப்பு ரினால்டி - வாழ்வு தரும் பாடம்
பாவம் அறியா பாவை (அமல உற்பவ அன்னை)
மீட்க வந்த மீட்பர்...
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை நவம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# நவம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | **புனிதர் அனைவரும் பெருவிழா** | I. தி.வெ. 7: 2-4,9-14<br>II. 1யோவா. 3: 1-3 | மத். 5: 1-12 |
| 2 | ச | **இறந்த நம்பிக்கையாளர் அனைவர் நினைவு** | I. இச. 3: 1-9<br>II. உரோ. 5: 5-11(அ) 6:3-9 | யோவா. 6: 37-40 |
| 3 | **ஞா** | **பொதுக்காலம் 31ம் ஞாயிறு** | I. இச. 6: 2-6<br>II. எபி. 7: 23-28 | மாற்கு 12: 28-34 |
| 4 | தி | புனித சார்லஸ் பொரோமியோ | பிலி. 2: 1-4 | லூக். 14: 12-14 |
| 5 | செ | | பிலி. 2: 5-11 | லூக். 14: 15-24 |
| 6 | பு | | பிலி. 2: 12-18 | லூக். 14: 25-33 |
| 7 | வி | | பிலி. 3: 3-8 | லூக். 15: 1-10 |
| 8 | வெ | | பிலி. 3: 17-4:1 | லூக். 16: 1-8 |
| 9 | ச | இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா | I. எசே. 47: 2-8,9,12<br>II. 1கொரி. 3: 9-11,16-17 | யோவா. 2: 13-22 |
| 10 | **ஞா** | **பொதுக்காலம் 32ம் ஞாயிறு** | I. 1அர. 17: 10-16<br>II. எபி. 9: 24-28 | மாற்கு 12: 38-44 |
| 11 | தி | தூர் நகர் புனித மார்ட்டின் | தீத். 1: 1-9 | லூக். 17: 1-6 |
| 12 | செ | புனித ஜோசபாத் ஆயர் | தீத். 2: 1-8,11-14 | லூக். 17: 7-10 |
| 13 | பு | அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி | தீத். 3: 1-7 | லூக். 17: 11-19 |
| 14 | வி | குழந்தைகள் தினவிழா | பில. 7-20 | லூக். 17: 20-25 |
| 15 | வெ | புனித மதலேன் மொரானோ | 2யோவா. 4-9 | லூக். 17: 26-37 |
| 16 | ச | ஸ்காட்லாந்து நாட்டுப் புனித மார்கரெட் | 3யோவா. 5-8 | லூக். 8: 1-8 |
| 17 | **ஞா** | **பொதுக்காலம் 33ம் ஞாயிறு** | I. தானி. 12: 1-3<br>II. எபி. 10: 11-14,18 | மாற்கு 13: 24-32 |
| 18 | தி | புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு | தி.ப. 28: 11-16, 30-31 | மாற்கு 14: 22-33 |
| 19 | செ | | தி.வெ. 3:1-6,14-22 | லூக். 19: 1-10 |
| 20 | பு | | தி.வெ. 4: 1-11 | லூக். 19: 11-28 |
| 21 | வி | புனித கன்னிமரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் நினைவு | செக். 2: 10-13 | மத். 12: 36-50 |
| 22 | வெ | புனித செசிலியா கன்னி | தி.வெ. 10: 8-11 | லூக். 19: 45-48 |
| 23 | ச | புனித முதலாம் கிளமெண்ட் திருத்தந்தை | தி.வெ. 11: 4-12 | லூக். 20: 27-40 |
| 24 | **ஞா** | **அனைத்துக்கும் அரசராம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பெருவிழா** | I. தானி. 7: 13-14<br>II. தி.வெ. 1: 5-8 | யோ.வா.18: 33-37 |
| 25 | தி | அலெக்சாந்திரியா நகர் புனித கத்தரின் | தி.வெ. 14: 1-5 | லூக். 21: 1-4 |
| 26 | செ | | தி.வெ. 14: 14-20 | லூக். 21: 5-11 |
| 27 | பு | | தி.வெ. 15: 1-4 | லூக். 21: 12-19 |
| 28 | வி | | தி.வெ.18:1-2,21-23,19:1-3,9 | லூக். 21: 20-28 |
| 29 | வெ | | தி.வெ.20:1-4,11-21:2 | லூக். 21: 29-33 |
| 30 | ச | புனித அந்திரேயா திருத்தூதர் விழா | உரோ. 10: 9-18 | மத். 4: 18-22 |



# மாபெரும் யூபிலி 2025

## எதிர்நோக்கின் திருப்பயணிகள்

திருத்தந்தை அறிவிப்பை முன்னிட்டு
தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
வழங்கும்

# பொதுநிலையினருக்கான இரண்டாம் வத்திக்கான் சங்க பயிற்சி பாசறை

இரண்டாம் பருவம்

பொருள் : **வத்திக்கான் சங்கம் தந்த புதிய பார்வை**

**17 நவம்பர்**
ஞாயிற்றுக்கிழமை

மாலை 4 மணி முதல்
8 மணி வரை

**இடம்**

**தீபகம்**
45, லேண்டன்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை-10

பதிவு செய்ய
இறுதி நாள்
10.11.2024

கட்டணம்
ரூ.100/-

நேரலை

## கருத்துரையாளர்கள்

**"திருஅவை ஏடு"**
அருட்திரு. ஜான் கிறிஸ்டி ச.ச.

**"திருஅவையில் பொதுநிலையினர்"**
திரு. ஞானபிரகாசம்

**"இறையாட்சி அலுவலில் பொதுநிலையினர்"**
திருமதி. பரிமளம் பீட்டர்

**சிறப்புரை**
அருட்திரு. ஸ்தனிஸ்லாஸ் சாமிக்கண்ணு ச.ச

நிறைவு குழு கலந்துரையாடல், நிறைவு பாடல்

4 மணிக்கு இறை புகழ். வத்திக்கான் சங்க ஏட்டிலிருந்து ஒரு பகுதி வாசிப்பு. துவக்க செபம்
பாடல் பயிற்சி : திரு. சாண்டோ

**தொடர்புக்கு**

அருட்திரு.ஜேசுதாஸ் 9444713174 | திரு. சாண்டோ 9840263623 | திரு. தேவராஜன் 9003112385

# தீபகம்

தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

45, லேண்டன்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-600010




**குழந்தைகள், பெரியவர்கள், இளையோர், முதியோர்**

அனைவரும் வருக! நன்மை பெறுக!!

- குருத்துவ துறவற அழைத்தலை பற்றி அறியவும்
- இளையோருக்கான வேலை வாய்ப்பை அறியவும்
- இளையோருக்கான திருமண தகவல் அறியவும்
- இளையோரின் குடிபோதையை ஒழிக்க ஆலோசனை பெறவும்
- இளையோருக்கான மன அமைதிக்கு வழிகாட்டவும்
- சிறுபான்மையோருக்கான அரசு நலன்களை அறியவும்
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான அரசு நலன்களை அறியவும்
- மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு நலன்களை அறியவும்

"இறையாட்சி உங்கள் நடுவேயே செயல்படுகிறது" (லூக்கா 17:21)

## அனைவரும் வருக!

நவம்பர் - 2024

இடம் :

**தூய லூர்து அன்னை திருத்தலம்**
**பெரம்பூர், சென்னை**

உங்களை அன்புடன் வரவேற்பவர்கள்

தீபகம், தொன் போஸ்கோ மறைப்பணி மையம்,
பங்குத் தந்தை, பெரம்பூர் மற்றும் சலேசியர்கள்


*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** *அட்டைப்பட வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக்** *அச்சிட்டோர்* : **சிகா அச்சகம்,** *கீழ்ப்பாக்கம், சென்னை - 10*